பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 15 வியாழக்கிழமை 28.03.2024 கதிர் 142

# மன்னார் – இராமேஸ்வரம் இடையே பாலம் கட்டுவது பற்றி இன்று பேச்சு

## இலங்கைக் குழு நேற்றே டில்லி சென்றடைவு

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் தரைத் தொடர்புகளை ஏற்படுத்தும் வகையில் தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையே பாலம் அமைப்பது தொடர்பான பேச்சுக்கள் இன்று புது டில்லியில் இடம்பெறவுள்ளன.

இந்தப் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்காக இலங்கைத் தூதுக்குழு நேற்று இந்தியா சென்றடைந்தது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார வளர்ச்சியைத்துரிதப்படுத்தும்வகையில் தரைவழித் தொடர்புகளை ☞ 2




பொது ஜன பெரமுனவிற்குள் மெல்ல மெல்ல நாமலின் கை ஓங்கி வருகின்றது. அண்மையில் அவரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கவேண்டும் என்று கட்சிக் கிளைக்கூட்டம்ஒன்றில்ஏகமனதாகத் தீர்மானம்நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்த நிலையில், நாமல் கட்சியின் தேசிய அமைப்பாளராக நியமனம் செய்யபப்பட்டுள்ளார்.

கொழும்பு விஜேராம வீதியில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுக் கூடிய கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலேயே இந்தப் புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கட்சியின்தேசியஅமைப்பாளராக நாமல் ராஜபக்ச ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக்க செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதுவரை அந்த கட்சியின் தேசிய அமைப்பாளராக முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவே பணியாற்றிவந்தார். எனினும், 2023 இறுதியில் இடம்பெற்ற கட்சியின் தேசிய மாநாட்டில் அவரது இடம் நிரப்பப்படாமலே இருந்தது. ☞ 2

## மைத்திரியின் வாக்குமூலம் நீதிமன்றில் முன்வைக்கப்படும்

### சட்டமா அதிபர் திணைக்களம் அறிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு வழங்கிய வாக்குமூலம் குறித்து நீதிமன்றத்தில் நேற்று விடயங்களை முன்வைக்கவுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மைத்திரியை நீதிமன்றத்திற்கு அழைத்து வாக்குமூலம் பெறுவதற்கான கோரிக்கையை நீதிமன்றத்தில் முன்வைக்கவுள்ளதாகவும்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்குஅவர் வழங்கிய வாக்குமூலம் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு நேற்று(26) அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள்ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மார்ச்22உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந் ☞ 2

## கல்வி, சுகாதார துறைகளை நவீனப்படுத்தாமல் எதிர்காலம் குறித்து நம்பிக்கை வைக்க முடியாது

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளை எதிர்காலத்திற்கு ஏற்ற வகையில் நவீனமயப்படுத்தாமல் நாட்டின் எதிர்காலம் குறித்து நம்பிக்கை வைக்க முடியாது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தெற்காசிய வலயத்தின் மிகப் பெரிய மகப்பேற்று வைத்தியசாலையாகக் கருதப்படும் காலி ☞ 8

## ஆளும் கட்சியால் எதிர்க் கட்சிகளுக்கு தடை விதிக்கப்படாத ஒரே ஆசிய நாடு

### இலங்கை குறித்து ஜனாதிபதியின் பெருமிதம்

ஆளும் கட்சியினால் எதிர்க்கட்சிகளின் செயற்பாடுகளுக்கு எந்தவித தடை விதிக்கப்படாத வகையில் ஜனநாயகத்தை முழுமையாகப் பாதுகாக்கும் ஒரேயொரு ஆசியா நாடு இலங்கை மட்டுமே என ஜனாதிபதிரணில்விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற இலங்கையின் முதலாவது தேசிய மாணவர் நாடாளுமன்றத்தின் ஆரம்ப ☞ 2

## ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்தில் நடக்கும்

### தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

நாடாளுமன்ற தேர்தல் இந்த வருடம் நடைபெற்றாலும் ஜனாதிபதி தேர்தல் உரிய காலத்தில் அதாவது செப்டம்பர் 17ம் திகதிக்கும் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கும் இடையில் நிச்சயமாக நடைபெறும் என தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிநாடாளுமன்றத்தை கலைத்தால் நாடாளுமன்ற தேர்தலை நடத்துவதை தவிர வேறு வழியில்லை என குறிப்பிட்டுள்ள அவர் நாடாளுமன்ற கலைக்கப்பட்டால் தேர்தலை நடத்த முடியாதென நாங்கள் தெரிவிக்க முடியாது அதனைநடத்தவேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு சில மாதங்களிற்குள் இரண்டு தேர்தல்களை நடத்துவதில்ஏதேனும் ☞ 8

## பதவி வகித்த வேறு எந்த ஜனாதிபதியும் விக்கிரமசிங்கவுக்கு ஈடாகமாட்டார்கள்

### ஐக்கிய தேசியக் கட்சித் தவிசாளர் பெருமிதம்

இலங்கையில் 6 ஆண்டுகள், 12 ஆண்டுகள் என ஜனாதிபதிகள் ஆட்சியில் இருந்துள்ளனர். ஆனால், தற்போதைய ஜனாதிபதி இந்த குறுகிய காலத்தில் செயற்பட்ட விதத்தை வேறு எந்த ஜனாதிபதியாலும் ஈடு செய்ய முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம்அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஓரிரு சம்பவங்களால் இந்த நாடு வங்குரோத்தாகவில்லை. இந்த நிலை நீண்ட கால காரணங்களால் உருவாகியது. நாட்டில் நீண்ட காலமாக போர் இடம்பெற்றது.

போருக்குத்தேவையான அனைத்துஆயுதங்களும் நாட்டின்நிதியில்மூலமே கொள்வனவு செய்யப்பட்டன. அதன்படி முப்பது வருடங்கள் போர்செய்தோம். முப்பது வருடகால போரால் நாட்டின் பொருளாதாரம் முற்றாக ☞ 9

## கோட்டாவின் பதவி விலக்கல் குறித்து முழுமையான விசாரணை வேண்டும்

### அமைச்சர் பிரசன்ன வலியுறுத்து

முன்னாள்ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவியிலிருந்து அகற்றப்பட்டதன் பின்னணியில் வெளிநாட்டு சக்திகள் உள்ளதாக சபாநாயகர் தெரிவித்துள்ளமை குறித்து முழுமையான விசாரணைகள் இடம்பெற வேண்டும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மார்ச் 21 சபாநாயகர் இது குறித்து பகிரங்கமாக அறிவித்துள்ள போதிலும் ஏன் ஆளும்கட்சி உட்பட அனைத்து கட்சிகளும் அமைதியாக உள்ளன என ஜலண்ட் நாளிதழ் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பிரசன்ன ரணதுங்க இதனை தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ☞ 2

## தேசிய கலாபவனத்தை சீரமைத்து வருட இறுதிக்குள் திறக்கப் பணிப்பு

### அதிகாரிகளுக்கு விடுத்தார் ஜனாதிபதி

பதின்மூன்றுவருடங்களாக பூர்த்தி செய்யப்படாமல் உள்ள ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கு மற்றும் மூடப்பட்டுள்ள தேசிய கலாபவன வளாகத்தில் கண்காணிப்புவிஜயத்தில் ஈடுபட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்த வருட இறுதிக்குள் தேசிய கலாபவனத்தை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

2011 ஆம் ஆண்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், கலைக்கூடத்தின் பணிகள் இன்னும் நிறைவடையவில்லை. தேசிய கலாபவன சீரமைப்புப் பணியும் முடங்கியுள்ளது.

கலாபவனம் தொடர்பாக கலைஞர்கள் மற்றும் கட்டடக்கலை நிபுணர்கள் இடையே நிலவும் கருத்து வேறுபாடுகளை செவிமடுத்த ஜனாதிபதிவிக்கிரமசிங்க, அது தொடர்பில் பொதுவான ☞ 2

## சீனா – இலங்கை இடையே நேற்று புதிய 9 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் 9 புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடும் நிகழ்வு சீனப் பிரதமர் லி கியாங் மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் இடம் பெற்றது.

தியனன்மென் சதுக்கத்தில் உள்ள போர் வீரர்களின் ☞ 2

## முல்லைத்தீவு சுகாதாரப் பணிப்பாளர் வவுனியா வீதி விபத்தில் நேற்றுச் சாவு

### டிப்பருடன் மோதிய பிக்அப் சிதைவு

வவுனியா, ஏ-9 வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில்

முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் உயிரிழந்தார் என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவில் இருந்து கடமை ☞ 2

## இலங்கையின் ஒருமைப்பாடுக்காக சீனா எப்போதுமே முன்னின்று செயற்படும்

### அந்த நாட்டு ஜனாதிபதி தெரிவிப்பு

இலங்கையின் சுயாதீனத்தன்மை, ஒருமைப்பாடு, இறைமையின்பாதுகாப்பிற்காக சீனா எப்போதும் முன்னிற்கும் என்று சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

சீனாவிற்குச் செய்துள்ள பிரதமர் தினேஷ்குணவர்தனவை பெய்ஜிங்கில் நேற்று சந்தித்த போதே சீன ஜனாதிபதிஇதனை தெரிவித்துள்ளார். ☞ 2

## புன்னாலைக்கட்டுவன் விபத்திலும் ஒருவர் சாவு

யாழ் மாவட்டம், புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உரும்பிராய் புன்னாலைக் கட்டுவன் சந்தியில் சிறிய ரக உழவு இயந்திரத்தில் தோட்டத்திலிருந்து ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அமெரிக்காவில் இருந்த பஸில் நாடு திரும்பியதும் அந்தப் பதவியல் அமர்த்தப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டபோதும் நாமலே அந்தப் பதவிக்கு நியமிக் கப்படப்போகிறார் என்பதை இந்தப் பத்தியில் ஏற்கனவே தெரிவித் திருந்தேன். அதன்படியே இப்போது நாமல் கட்சியின் தேசிய அமைப்பாளராக நியமிக்கப்பட் டுள்ளார்.

எதிர்காலத்தில் நாமலை மையப்படுத்தி பெரமுனவின் அரசியலை - முன்னகர்த்துவதற்கு ஏ-ற்றவாறுராஜபக்சவினர்காய்களை நகர்த்தத் தொடங்கியுள்ளனர். விரைவில் நாமல் மற்றும் கட்சியின் செயலாளர் சாகர தலைமையில் கட்சியின் மறுசீரமைப்புப் பணிகள் துரிதப்படும்என்றுகட்சிவட்டாரங்கள் கூறுகின்றன.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்துவது குறித்து ஆராயப்பட்டு கடந்த பல வருடங்களாக ஆராயப்பட்டு வந்தது. இதன் அடுத்த கட்டமாக அந்தத் திட்டத்தைச் சாத்தியமாக்கும்வகையில்பாலத்தை எப்படி, எங்கு அமைப்பது என்பது தொடர்பில் இன்றைய பேச்சில் ஆராயப்படவுள்ளது.

இராமேஸ்வரத்திற்கும் தலைமன்னாரிற்கும் இடையில் உள்ளகடல்பகுதி ஆழம்குறைந்தது என்பதுடன் சிறிய மற்றும் பெரிய மணல் திட்டுக்களையும் கொண்டது. இதனூடாகப் பாலம் அமைக்கப்படமுடியும் என்று கொழும்பு பல்கலைக்கழக நிலவியல்துறைப் பேராசிரியர் எஸ்.ஏ.நோர்பேட் அண்மையில் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க இந்தியாவிற்குச்சென்றுஅந்தநாட்டுப் பிரதமர் நரேந்திர மோடியுடன் நடத்திய பேச்சுக்களில் இரு நாடுகளுக்கும் இடையிலான தரைவழித்தொடர்பைஏற்படுத்துவது குறித்துப் பேச்சு நடத்துவதற்கான இணக்கம் எட்டப்பட்டிருந்தது. அதனடிப்படையில் இன்றைய பேச்சுக்கள் இடம்பெறுகின்றன.

இந்தப்பேச்சில்பங்கேற்கவென, ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழுவின் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையிலான குழுநேற்றுஇந்தியாசென்றது. இந்தக் குழுவினர் இந்திய அதிகாரிகளைச் சந்தித்து தரைவழிப் பாதைக்கான சாத்தியக்கூறுகளைஆராயவுள்ளது.

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடன்பாட்டை எட்ட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

சகல தரப்பினருடனும் இணக்கப்பாட்டுக்கு வருவதன் மூலம் இந்த வருட இறுதிக்குள் கலாபவனத்தை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி தெரிவித்தார். தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்க ஆளும் தரப்புத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கொழும்பு நகருக்கு இன்று தேவைப்படுவது குறைந்த விலையில்கிடைக்கக்கூடியஉயர்தர திரையரங்குகளேஎனசுட்டிக்காட்டிய ஜனாதிபதி, ஜோன் டி சில்வா திரையரங்குநிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு குறைந்த விலைக்கு திரையரங்குகளை வழங்க முடியுமா என வினவினார்.

இந்த நிர்மாணம் மற்றும் பராமரிப்பு தொடர்பில் நாடக கலைஞர்களுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானத்திற்கு வருவதே சிறந்தது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

நாடகத்துறைக்காக லும்பினி அரங்கு மற்றும் புதிய அரங்கு புனரமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு தெரிவித்த ஜனாதிபதி, கொழும்பு சுதர்ஷி வளாகத்தில் நாடக அரங்கொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார்.

தாமரைத்தடாகம், கலாபவனம், ஜோன்டிசில்வாஞாபகார்த்தஅரங்கு, நூதனசாலை மற்றும் அதனுடன் தொடர்புடைய வளாகங்களை இணைத்து தேசிய கலாசார வலயமொன்றைஉருவாக்குவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அது தொடர்பான முழுமையான அறிக்கை ஒன்றைத் தயாரிக்குமாறுகலாசாரஅமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கினார்.

இலங்கையின் நூதனசாலை அமைப்பை சர்வதேச மட்டத்திற்கு உயர்த்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்கான வழிகாட்டல்களை வழங்கக்கூடிய பொருத்தமான நாட்டை பெயரிடுமாறும் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)





முடிந்துவவுனியாநோக்கிபயணித்த பணிப்பாளரின்வாகனம்வவுனியா, ஓமந்தை, கள்ளிக்குளம் சந்தியைக் கடந்து பயணித்தபோது எதிரே வந்த டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது டிப்பர் வாகனத்திற்கு முன்னே அதேதிசையில்பயணித்த முச்சக்கரவண்டியும்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி தடம்புரண்டுள்ளது.

விபத்தில் வைத்தியர்பயணித்த வாகனம் கடும் சேதமடைந்ததுடன், அதனைச் செலுத்திச் சென்ற முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளரான வைத்தியர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதும், அவர் இறந்துவிட்டார்.

சம்பவத்தில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளரும், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளருமான மருத்துவர் கு.அகிலேந்திரனே உயிரிழந்தார்.

விபத்துக்குள்ளான டிப்பர் வாகனத்தின் சாரதி ஓமந்தைப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (100)

## மைத்திரியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ததுடன் கடந்த திங்கட்கிழமை அவர் வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப்புலனாய்வுதிணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அங்கு அவரிடம் சுமார் 6 மணி நேரம் வாக்குமூலம் பெறப்பட்டது.

## இலங்கையின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருநாட்டின்உள்விவகாரங்களில் தலையிடாமல் நட்புறவு, அமைதி, பரஸ்பர மரியாதை உள்ளிட்ட கொள்கைகளின் கீழ் தொடர்ந்து செயற்பட இரு நாடுகளுக்கும் இடையில்இணக்கம்காணப்பட்டதாக பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித் துள்ளது.

இலங்கையின்அபிவிருத்திக்குத் தேவையான திட்டங்களை முன்வைக்கும் பட்சத்தில், அதற்கு சீனாவின் ஆதரவு வழங்கப்படும் என சீன ஜனாதிபதி இதன்போது உறுதியளித்துள்ளார்.

அரசியல், சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்காக இலங்கை மேற்கொள்ளும்பிரயத்தனங்களுக்கு சீனாவின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு கிடைக்கும் எனவும் சீன ஜனாதிபதி கூறியதாக பிரதமரின்ஊடகப்பிரிவுவிடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமர் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற கட்சி உள்ளிட்ட இலங்கையின்ஏனையகட்சிகளுடன் சீனகம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்தும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக சீன ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

## கோட்டாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுஉயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்து விசாரணையை கோரும் அரசியல்கட்சிகள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏன் இந்த விடயம் குறித்துஅமைதியாகஉள்ளனர்என்ற ஜலண்ட் கேள்வி எழுப்பியதற்கு பதிலளித்துள்ள பிரசன்ன ரணதுங்க தான் அரசியல் கட்சி தலைவர்களின் கூட்டத்தில் இது குறித்து கேள்வி எழுப்பவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மே 9 2022 இல் அரகலய செயற்பாட்டாளர்கள் மீது இடம்பெற்ற தாக்குதலை தொடர்ந்து நாடாளவிய ரீதியில் பொது ஜன பெரமுனவை சேர்ந்தவர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் குறித்த விசாரணைகள் தனக்கு திருப்தியளிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணைகள் குறித்து எதுவும் தெரியாதநிலைமைகாணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

திட்டமிட்ட கும்பலால் இழைக் கப்பட்ட வன்முறைகளால் சொத்துக் களைஇழந்தபலஅரசியல்வாதிகளால் நானும் ஒருவன் நான் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடுசெய்துள்ளேன்வீடியோக் களை மனித உரிமை ஆணைக் குழுவிடம் வழங்கியுள்ளேன் அவர்கள் முன்னிலையில் இரண்டு தடவை விசாரணைகளிற்காக ஆஜராகியுள்ளேன் ஆனால் மிகவும் மந்த கதியிலேயே விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஆளும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் 9 மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் 100 வலயங்களில் நிறுவப்பட்ட அனைத்து வலய மாணவர் நாடாளுமன்றங்களிலிருந்தும் அதிக வாக்குகளைப் பெற்ற தலா இரு உறுப்பினர்கள் தேசிய மாணவர் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித் துவப்படுத்துகின்றனர்.

கல்வி அமைச்சின் இணைப்பாடவிதான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக் கிளையின் ஒத்துழைப்புடன் தேர்தல்கள் ஆணைக்குழுவினால்அண்மையில் நடத்தப்பட்ட தேர்தலில் தேசிய மாணவர்நாடாளுமன்றசபாநாயகர், பிரதமர், பிரதி சபாநாயகர் மற்றும் 10 அமைச்சர்கள் மற்றும் 10 பிரதி அமைச்சர்களும்நியமிக்கப்பட்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவுக்கு அமைய ஜனாதிபதி அலுவலகம் உட்பட கொழும்பில் உள்ள முக்கிய இடங்களை பார்வையிடும் வாய்ப்பு பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த நிகழ்ச் சித்திட்டத்துடன் இணைந்து வெளியிடப்பட்ட 'பிபிதுனு சிசு மெதி சபய' நூலை ஜனாதிபதி செயலக உதவிப் பணிப்பாளர் மேஜர் நதீக்க தங்கொல்ல ஜனாதிபதிக்கு கையளித்தார்.

மேலும் இச்சந்தர்ப்பத்தை முன்னிட்டு கல்வி அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேராவினால் ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவிற்கு நினைவுப் பரிசில் ஒன்றும் வழங் கப்பட்டது.

தேசியமாணவர்நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குநாட்டின்அரசியல் தொடர்பான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்க ஜனாதிபதி சந்தர்ப்பம் வழங்கி யதுடன், ஜனாதிபதி அலுவலகத்தில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு வருகை தருவதற்கும் ஜனாதிபதி சந்தர்ப்பம் வழங்கியிருந்தார்.

தேசியமாணவர்நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சான்றிதழ் களை ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க வழங்கி வைத்தார்.

தேசிய மாணவர் நாடாளு மன்றத்தில்உரையாற்றியஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் முதலாவது தேசியமாணவர்நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தில் பங்கேற்கும் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச் சியடைகிறேன்.

ஜனநாயகத்தை முழுமையாகப் பாதுகாத்த ஒரே நாடு இலங்கை என்பதால் எமது நாடு விசேடமான ஒரு நாடாகும். 1833ஆம் ஆண்டில் எமது நாட்டின் சட்டமன்றம் நிறுவப்பட்டது. அன்று வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை. ஆளுநரால் இலங்கையர்கள் சிலர் இதற்கு நியமிக்கப்பட்டனர்.

1912இல்இலங்கையர்ஒருவரை உறுப்பினராகத் தெரிவு செய்யும் வாய்ப்பு கிடைத்தது. அப்போது பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கவில்லை. சொத்து மற்றும் கல்வி அடிப்படையில் சுமார் ஐயாயிரம் பேருக்கு வாக்களிக்க வாய்ப்பு கிடைத்தது.

பின்னர் 1931 இல் இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமை கிடைத்தது. அதன்படி, 21 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் வாக்களிக்கும் உரிமையைப் பெற்ற ஆசியாவின் முதல் நாடாக நாம் திகழ்ந்தோம். அன்று முதல் எதிர்க்கட்சிகளுக்கு ஆளும் கட்சியினால் தடை விதிக்கப்படாத ஒரே ஆசிய நாடாக இலங்கை காணப்படுகிறது. 1931க்குப் பிறகு, ஏனைய அனைத்து நாடுகளிலும் எதிர்க்கட்சிகள் ஜனநாயகத்தை இழந்துள்ளன. எம்மை எவ்வளவுதான் விமர்சித்தாலும், குற்றஞ்சாட்டினாலும், பல குறைபாடுகளுக்கு மத்தியிலும் ஜனநாயகத்தை பாதுகாத்து வருகிறோம்.

பின்னர் டொனமோர் முறைமையின் கீழ் எங்களுக்கு ஏழுஅமைச்சுப்பதவிகள்கிடைத்தன. மூன்று அமைச்சுப் பொறுப்புகளை வெள்ளையர்கள் வகித்தனர். பின்னர் அதற்கும் இலங்கையர்கள் நியமிக்கப்பட்டனர். இச்சபையினால் ஏழு குழுக்கள் நியமிக்கப்பட்டு அவற்றிலிருந்து ஏழு தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் அமைச்சர்களாக பணியாற்றினர். ஏனென்றால் அப்போது அரசியல் கட்சிகள் இருக்கவில்லை. உலகப் போரின் போது போர் செய்வதைத் தவிர அனைத்து நடவடிக்கைகளும் இலங்கையிடம்ஒப்படைக்கப்பட்டன. ஏனெனில் அப்போது இலங்கை பிரித்தானியா, அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய நாடுகளுடன் இணைந்து செயற்பட்டது.

அதன் பிறகு சோல்பரி அரசமைப்பின் படி சுதந்திரம் கிடைத்தது. நீங்கள் இருக்கும் கட்டடம்அரசியல்நிர்ணயசபையின் கூட்டத்திற்காக கட்டப்பட்டது. பின்னர் இந்த சபையில் டொனமோர் ஆணைக்குழு நிறுவப்பட்டது. பின்னர் இது மக்கள் பிரதிநிதிகள் சபையாக மீண்டும் செயல்பட்டது. செனட் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் சபை ஆகியவையும் இந்த இடத்தில் செயற்பட்டன.

1972 இல் இலங்கை குடியரசாக மாறியபோது, இது தேசிய அரச சபையாகியது. 1977இல் தேசிய அரச சபைக்கு நான் தெரிவானேன். தேசியஅரசசபையை பிரதிநிதித்துவப்படுத்திய நான்கு பேர் இன்று நாடாளுமன்றத்தில் உள்ளனர். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் 1970 இலும் 1977ஆம் ஆண்டில் ஆர். சம்பந்தனும் நானும் இங்கு வந்தோம். 1977 இல், நாடு நிறைவேற்றுஜனாதிபதிமுறைக்குள் பிரவேசித்தது. 1982 இல் நாங்கள் புதிய நாடாளுமன்றத்திற்குச் சென்ற பிறகு, இந்தக் கட்டடம் ஜனாதிபதி அலுவலகமாக மாறியது.

இந்தப் பின்னணியில் உலகப் போர்கள், உள்நாட்டுப் போர் நடந்தாலும், ஜனநாயகத்தையும், ஆளும்தரப்பின் மற்றும் எதிர்க்கட்சிகளின் செயல்பாட்டையும் நாம் ஒருபோதும் இல்லாமலாக் கவில்லை. இந்த முறையால், அனைவரின் கருத்துகளும் முன் வைக்கப்பட்டன. இந்தநாடாளுமன்ற அமைப்பை நாம் பாதுகாக்க வேண்டும்.

முழு ஆசியாவுக்கும் மற்றும் ஆப்பிரிக்காவிலும் இரண்டுநாடுகள் மாத்திரமே இதைச் செய்துள்ளன. ஒன்று இலங்கை மற்றொன்று மொரிஷியஸ். அப்படியானால், நாம் அனைவரும்ஒன்றிணைந்துஇதைப் பாதுகாக்க வேண்டும். பிரிட்டன், அயர்லாந்து, சுவிட்சர்லாந்து மற்றும் ஸ்வீடன் மட்டுமே ஐரோப்பாவில் ஜனநாயகத்தைப் பேணின. ஜனநாயகத்தைப் பேணுவது பற்றி நமக்கு அறிவுரை கூறும் ஏனைய அனைத்து நாடுகளும் அடால்ஃப் ஹிட்லரின் ஆட்சியின் கீழ் வந்தன.

இந்த பொறிமுறையை எவ்வாறு பேணுவது என்பதை கற்றுக்கொள்ள இங்கு இருக்கும் நீங்கள் ஆர்வமாக இருக்கலாம். மேலும் இங்கு அரசியலில் ஆர்வம் உள்ளவர்களும்இருக்கலாம்.அதற்கு தேசிய மாணவர் நாடாளுமன்றம் அடிப்படையாக அமையும் என நம்புகிறேன் என்றார்.

# சக்தி தொலைக்காட்சியில் புதிய இசை நிகழ்ச்சி

## மார்ச் 30 முதல் அறிமுகம்

சக்தி தொலைக்காட்சி புதிய 'சக்தி க்ரௌன்' என்கிற இசை நிகழ்ச்சியை மார்ச் 30 முதல் ஒளிபரப்பவுள்ளது. ''இலங்கை வாழ் இளம் கலைஞர்களை உலகறியச்செய்யும் முயற்சியாக, தமிழ் இசைத்துறையின் மறுமலர்ச்சியாகமுற்றிலும்மாறுபட்ட இசை ரியாலிட்டி நிகழ்ச்சியாக இது இருக்கும் என்று தொலைக்காட்சி அறிவித்துள்ளது.

இந்த புதிய முயற்சி நம் நாட்டில் பாடும் திறமைகளை வெளிக்கொணர்வதற்காக வித்தியாசமாகவும் சர்வதேச தரத்திலும்உருவாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 43 அத்தியாயங்கள் கொண்ட இந்த நிகழ்ச்சிமார்ச்3-0முதல்ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிறு தினங்களில் இரவு 8.30மணிக்கு இல்லத்திரை சக்தியில் ஒளிபரப்பாகவுள்ளது.

சக்தி தொலைக்காட்சியின் 25 வருட அனுபவமும் ஸ்டெயின் (Stein) கலையகத்தின் உலக தரமும் இணைந்து இந்த நிகழ்ச்சியைமிகச்சிறந்தமுறையில் மக்களிடம் கொண்டு சேர்க்கும் என்று தொலைக்காட்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## சீனா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவுத் தூபிக்கு பிரதமர் இன்று மலர் அஞ்சலி செலுத்தினார். பின்னர் சீன இராணுவத்தினரின் அணிவகுப்பு மரியாதையை தொடர்ந்து, இருதரப்பு பேச்சு இடம்பெற்றது.

அதன் பின்னர், பெய்ஜிங்கில் உள்ள கிரேட் ஹாலில் நடைபெற்ற இருதரப்பு பேச்சில், பொருளாதார ஒத்துழைப்புக்கு மேலதிகமாக, சமூக, கலாச்சார, கல்வி மற்றும் விவசாயத்துறைகளில்ஒட்டுமொத்த ஒத்துழைப்பை ஏற்படுத்துவது குறித்தும் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒன்பது புரிந்துணர்வுஉடன்படிக்கைகளின் மூலம்இலங்கைக்கும்சீனாவுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் ஒத்துழைப்பில் புதிய அத்தியாயம் உருவாக்கப்படும் என இரு நாட்டு பிரதமர்களும் உறுதிப்படுத்தினர்.

இலங்கையின் சார்பில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்கவும், சீனா சார்பில் ஒன்பது அமைச்சுக்களின் செயலாளர்களும்கைச்சாத்திட்டனர்.

இந்த நிகழ்வில் சீன மக்கள் குடியரசின்அமைச்சர்கள்,இராஜாங்க அமைச்சர்களான ஷெஹான் சேமசிங்க, அசோக பிரியந்த, நாடாளுமன்றஉறுப்பினர்யதாமினி குணவர்தன உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# வெடுக்குநாறி சிவனாலயத்தில் கைதானோர் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு



வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கைதான எட்டுப்பேரில் 6 பேர் செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமைக் காரியாலயத்தில் முறைப்பாடுகளை மேற்கொண்டனர்.

வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரியின் செயற்பாடுகள் தமிழர்களுக்கு எதிரான இனவாத ஒடுக்குமுறைகளை மேற்கொள்ளும் சிறீலங்கா பொலிஸாருக்கு துணைபோவதாக அமைந்துள்ள காரணத்தாலேயே கொழும்பில் முறைப்பாடு செய்யப்பட்டதாக முறைப்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் மனித உரிமை விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரியுடன் நேரில் சந்தித்து சிவராத்திரி தினத்தில் வெடுக்குநாறிமலை ஆதி இலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பொலிஸார் மேற்கொண்ட அராஜகங்கள் மற்றும் கைதுகள் துன்புறுத்தல்கள் அடிப்படை வசதிகளற்ற சிறையில் அடைத்து வைக்கப்பட்டமை தொடர்பில் எடுத்துக் கூறப்பட்டது.

மேலும் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு ஆணையாளரது பக்கச் சார்பானதும் நம்பகமற்றதுமான செயற்பாடுகள் சுட்டிக் காட்டப்பட்டதுடன் அதிகாரத் துஸ்பிரயோகத்தில் ஈடுபட்ட பொலிஸார் மீது குற்றவியல் நடவடிக்கை எடுத்துத் தண்டிக்க வேண்டும் என்பதுடன் எதிர்காலத்தில் இடையூறுகள் இன்றி ஆலய வழிபாடுகளில் ஈடுபடுவதற்கான சூழல் உறுதிப்படுத்தப்படல் வேண்டுமெனவும் கோரி மகஜர் ஒன்றும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் கையளிக்கப்பட்டது. (05)

# தேசிய மட்ட மாணவர் நாடாளுமன்ற அமர்வில் மருதமுனை ஷம்ஸ் மாணவி லபீறுல் வஸீல் பாத்திமா அப்லின் பங்கேற்பு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட மருதமுனை கமு/கமு ஷம்ஸ் மத்திய கல்லூரியில் தரம் 13 கலைப்பிரிவில் கல்வி கற்று வரும் லபீறுல் வஸீல் பாத்திமா அப்லின் ஜனாதிபதி செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேசிய மட்ட மாணவர் நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டார்.



இவர் 2023 - 2024 இல் இடம்பெற்ற பாடசாலை, வலய, மாகாண மட்ட மாணவர் நாடாளுமன்ற பிரதிநிதி தேர்வுகளிலும், மும்மொழி செயல்முறை வாய்மொழி பரீட்சைகளிலும், தேர்தல்களிலும் போட்டியிட்டு கல்முனை வலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி தெரிவு செய்யப்பட்டுள்ளார். மாணவர் நாடாளுமன்ற தேர்தல் ஊடாக பிரதமர், பிரதி அமைச்சர் பதவிகளை தனது பாடசாலையிலும் கல்முனை கல்வி வலயத்திலும் வகித்து தற்போது தேசிய நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு பெருமையை தேடித்தந்துள்ளார்.

மருதமுனையில் உள்ள 06 பாடசாலைகளிலிருந்தும் இவர் ஒருவர் மாத்திரமே தேசிய மாணவர் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கல்முனை கல்வி வலயத்திலிருந்து தேசிய மட்ட மாணவர் நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொள்வதற்காக இரு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். மற்றைய மாணவி கல்முனை கமு/அல்-அஸ்ஹர் வித்தியாலயத்தை சேர்ந்த ஜே.ஷைனப் சேஹா என்பவராவார்.

இலங்கையின் 09 மாகாணங்களிலும் உள்ள 100 கல்வி வலயங்களில் இருந்து ஒரு வலயத்திற்கு இரு மாணவர் நாடாளுமன்ற பிரதிநிதிகள் வீதம் உயர் உத்தியோகத்தர்கள் அடங்கலாக சுமார் 212 பிரதிநிதிகளை உள்வாங்கி தேசிய மாணவர் நாடாளுமன்ற அமர்வு கொழும்பு பழைய நாடாளுமன்றத்தில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கல்வி அமைச்சர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் செவ்வாய்க்கிமை நடைபெற்றது.

தேசிய மட்ட மாணவர் நாடாளுமன்றத்திற்கான சபாநாயகர், பிரதமர், சபை முதல்வர், குழுக்களின் தலைவர் , அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களை தேர்வு செய்வதற்கான தேர்தல் திங்கட்கிழமை மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் நடைபெற்றது. இதனை தொடர்ந்து ஒத்திகை அமர்வு மற்றும் தேசிய மட்ட மாணவர் நாடாளுமன்ற அமர்வு, கலாசார நிகழ்வுகள், சுற்றுலா என தங்குமிட வசதியுடன் அரச ஏற்பாட்டில் நேற்று வரை கல்வி அமைச்சின் திட்டமிடலுடன் மாகாண கல்விப் பணிமனைகளின் மேற்பார்வையின் கீழ் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

தேசிய மாணவர் நாடாளுமன்றத்தில் கலந்து கொண்ட மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி மாணவி பாத்திமா அப்லினுக்கு பாடசாலையின் அதிபர் எம்.எம்.ஹிர்பகான் உட்பட பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதி தலைவர்கள் மற்றும் பாடசாலை சமூகம் உள்ளிட்டோர் தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர். இவர் மருதமுனை அல்-ஹம்றா வித்தியாலயத்தின் பழைய மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது. (05)

# காரைக்கால் அம்மையை கருத்தினிலே வைப்போம்!




மாநிலத்தில் மொழிகளோ வகைவகையாய் இருக்கிறது
அவற்றுக்குள் தமிழொன்றே தனித்துவமாய் மிளிர்கிறது
காதலை வீரத்தை கண்ணியமாய் சொன்னாலும்
கடவுளையும் பக்தியையும் கருவாக்கி உயர்கிறதே

எம்மொழியும் பக்தியினை எட்டியும் பார்க்கவில்லை
பக்தியெனும் பெருவெளியில் பயணிக்க நினைக்கவில்லை
எம்மொழியாம் தமிழொன்றே பக்தியினைப் பற்றியது
இதனாலே எங்கள்மொழி தனித்துவமாய் ஒளிர்கிறது

பக்தியை இலக்கியமாய் பாருமே பார்ப்பதற்கு
படைத்திட எங்கள்மொழி பாருக்குள் உயர்வாகும்
பக்திக்குள் மூழ்கிவிட்டால் பரவசமே உருவாகும்
பரவசத்தை அளிக்குமொழி பாங்குடைய தமிழாகும்

பக்தி இலக்கியத்தை தொடக்கிய முன்னோடி
காரைக்கால் ஈன்றெடுத்த கனிவான பெண்ணாவார்
மாதரில் மாணிக்கமாய் மாசில்லா மங்கையாய்
மாதவத்தின் உருவமாய் வந்துமே பிறந்திட்டார்



நல்லறமாம் இல்லறத்தில் நங்கையும் இணைந்திட்டாள்
நற்கணவன் கைபிடித்து நலமுடனே வாழ்ந்திட்டாள்
தெய்வமது சித்தத்தால் சீரான குடும்பமதில்
தித்திக்கும் மாங்கனி திசைமாறச் செய்ததுவே

கைபிடித்த கணவன் கண்ணான மனைவியை
சந்தேக மனத்துடனே சஞ்சலத்துள் ஆழ்த்தினான்
மாங்கனியின் மாயத்தை மனமேற்க மறுத்ததால்
மாதரசி மங்கையினை மனமொதுக்கி அகன்றிட்டான்

பதிறித் துடித்தாள் பரமனையே பற்றினாள்
அழகுடைக் கோலத்தை அருவருப்பாய் எண்ணினாள்
யாருமே விரும்பாத கோலத்தை மனங்கொண்டாள்
பேயுருவை பெருவிருப்பாய் பெற்றிட்டாள் இறைவனிடம்

காரைக்கால் அம்மை பேயுருவாய் மாறினார்
கணக்கில்லாப் பேரன்பை கடவுளிடம் காட்டினார்
பக்திப் பெருவெளியில் பயணிக்கத் தொடங்கினார்
பரமனைப் பாடினார் பக்திக்கும் வித்திட்டார்

அன்னைத் தமிழுக்கு அம்மையார் பெருஞ்சொத்தே
முன்னவராய் இருந்து இணைத்திட்டார் பக்தியினை
பக்தி இலக்கியமாய் மலர்வதற்கு வித்திட்டார்
பசுந்தமிழும் அதையேற்று பார்போற்ற எழுந்ததுவே

இசையாலே தமிழ்பாடி இறைதுதிக்க வழிசெய்த
எங்கள்தமிழ் முன்னோடி காரைக்கால் அம்மையே
அவர்வகுத்த அடியொற்றி அவர்பின்னே வந்தடியார்
ஆண்டவனைப் பண்ணோடு அன்புருகப் பாடினரே

அந்தாதி தந்தார் பதிகமும் தந்தார்
திருவிரட்டை மணிமாலை சிறப்பாகத் தந்தார்
பதிகத்தைத் தொடக்கி பக்தியைக் காட்டி
அந்தாதிக் கன்னையாய் ஆண்டவனைப் பாடினார்


பக்திப் பாமரபில் முன்னோடி அம்மையார்
பதிகத்தைத் தொடக்கியவரும் காரைக்கால் அம்மையார்
வெண்பாவைத் தொட்டார் விருத்தத்தை காட்டினார்
பண்பாடிப் பக்தியிலே பலர்தொடர வழிவகுத்தார்

இசைத் தமிழால் பாடுதற்கு இவரேவித்தாவார்
பண்பாடி பக்தியினைப் பரப்புதற்கும் முன்னோடி
நாயன்மார் பண்ணோடு நற்றமிழில் பாட
காரைக் காலம்மையே தனிப்பாதை வகுத்தார்

சைவத்தை மேலாகத் தன்னகத்தில் கொண்டார்
தமிழ்ப் பக்தியக்கத்தின் முன்னோடி ஆனார்
பேயுருவை உவந்தேற்ற பெரும்பெண்ணும் ஆனார்
பெம்மானே அம்மையென அழைத்த பெண்ணுமாவர்

இறையுணர்வை இலக்கியத்தில் இணைத்த பெண்ணாவார்
இறையடியில் இருப்பதை இன்பமாய் ஏற்றார்
பேயுருவில் கைலாயம் சென்ற பெண்ணாவர்
பெம்மானின் கோவிலில் இருப்பிடமும் பெற்றார்

காரைக்கால் அம்மையை கருத்தினிலே வைப்போம்
காலத்தால் அழியாத கவிமரபை அளித்தார்
திருமுறைகள் வருவதற்குத் திறவுகோல் அவரே
அவர்தினத்தைப் புனிதமாய் அனைவருமே நினைப்போம்



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# வாக்குமூலத்தை பகிரங்கப்படுத்துக

உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுவெடிப்புக்கள் தொடர்பில் தொடர்ந்து வரும் மர்மங்கள் இன்னும் விலகியபாடில்லை. அந்தத் தாக்குதல்களை நடத்தியவர்கள் ஒரு குறிப்பிட்ட மதப் பிரிவைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களை இயக்கியவர்கள் யார் என்பதும் எந்த நோக்கத்திற்காக இந்தக் குண்டுவெடிப்புக்களும் உயிரிழப்புக்களும் ஏற்படுத்தப்பட்டன என்பதும் இன்னும் முழுமையாக வெளிவரவில்லை.

2019ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி ராஜபக்சக்களை மீண்டும் பதவியில் இருத்தும் நோக்கத்தோடு இந்தக் குண்டுவெடிப்புக்கள் நிகழ்த்தப்பட்டன என்ற சந்தேகம் பரவலாக இருக்கின்றது. இந்தக் குண்டுவெடிப்புக்களைத் தடுத்து நிறுத்தியிருக்கமுடியும் என்றபோதும் அதனைச் செய்வதற்குத் தவறினார்கள் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரியையும் முன்னாள் காவல் மா அதிபரையும் நீதிமன்றம் குற்றவாளிகளாகக் கண்டிருந்தது. இருந்தாலும் தாக்குதலின் பின்னணியில் செயற்பட்டவர்கள் மற்றும் அவர்களின் நோக்கம் குறித்து முழுமையான எந்த விசாரணைகளும் ஒழுங்காக நடத்தப்படவில்லை.

குண்டுவெடிப்புக்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை பகிரங்கப்படுத்த ஆளும் தரப்பினர் காட்டிவரும் தயக்கம் இந்தச் சந்தேகங்களை மேலும் அதிகரித்துள்ளது. தமக்குத் தரப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையில்கூட வழக்கின் முக்கிய சாட்சியான – குண்டுவெடிப்புக்களின் சூத்திரதாரியான – சஹ்ரானின் மனைவியின் வாக்குமூலம் உள்ளிட்ட சில விவரங்கள் தவிர்க்கப்பட்டிருந்ததாக கர்த்தினால் மல்க்கம் ரஞ்சித் குற்றஞ்சாட்டியிருக்கிறார். பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியையும் குண்டு வெடிப்புக்களுக்கான பின்னணி வெளிப்படுத்தப்படவேண்டியதன் முக்கியத்துவத்தையும் அவர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றார்.

இந்த நிலையிலேயே உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்களுக்குக் காரணமானவர்கள் யார் என்பது தனக்குத் தெரியும் என்று முன்னாள் அரசுத் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். இதற்காக அவரைக் கைது செய்யவேண்டும் என்று பல தரப்பட்டவர்களும் வற்புறுத்திய நிலையில் காவல்துறையினரால் அவரிடமிருந்து வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. சுமார் 6 மணி நேரமாகப் பெறப்பட்ட அந்த வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் முன்வைத்து, அவரிடமிருந்து நீதிமன்றம் வாக்குமூலம் ஒன்றைப் பதிவு செய்யவேண்டும் என்று கோரப் போவதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மைத்திரியின் இந்த வாக்குமூலத்தைப் பகிரங்கப்படுத்தவேண்டும் என்கிற கோரிக்கைகள் தற்போது அதிகரித்து வருகின்றன. சட்ட மா அதிபர் திணைக்களம் அதனை நீதிமன்றத்தில் முன்வைக்கின்றபோது அது மக்கள் பார்வைக்குரிய பொது ஆவணமாக இருக்குமா என்பது தெளிவுபடுத்தப்படவில்லை. இரகசிய ஆவணங்களாக்கப்படாது மக்கள் பார்வைக்கு மைத்திரியின் வாக்குமூலம் வெளியிடப்படவேண்டும். உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் உறவினர்களும் ஏனையவர்களும் அதனைத் தெரிந்துகொள்வதற்கு முழு உரித்துடையவர்கள் என்பதால் ஆளும் தரப்பு அதனைப் பகிரங்கப்படுத்தவேண்டும்.

ஏற்கனவே குண்டுத் தாக்குதல் குறித்த தகவல்களை மறைத்து இது விடயத்தில் ஒரு மர்மச் சூலை உருவாக்கியதைப் போன்று மைத்திரியின் வாக்குமூலம் விடயத்திலும் செய்யாது, அதனை பகிரங்கப்படுத்தி அதனடிப்படையில் உரிய நடவடிக்கைகளையும் ஆளும் தரப்பு எடுக்கவேண்டும்.




# தமிழ்நாட்டில் பாஜக வளர்ச்சியா, வறட்சியா?



இந்தியாவின் மத்தியில் ஆளும் கட்சியாக இருக்கும் பாரதீய ஜனதாக் கட்சி கடந்த பல வருடங்களாக தமிழ்நாட்டில் ஆழமாகக் காலூன்றுவதற்கு முயன்று வருகின்றது. தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு முக்கிய அமைச்-சுப் பதவிகளை வழங்குவது, பிரதமர் மோடி தமிழ்நாட்டுக்கு அடிக்கடி வந்து அபிவிருத்திப் பணிகளைத் தொடக்குவது என்று பெருமெடுப்பில் களவேலைகளில் ஈடுபட்டு-வருகின்றது. இந்தியாவின் ஏனைய மாநிலங்களில் பாஜக ஆதிக்கம் செலுத்தி வந்தாலும் தமிழ்நாட்டில் அதனால் காலூன்ற முடிந்ததில்லை. கடந்த தடவை அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து சில நாடாளுமன்ற இடங்களைத் தமிழ்நாட்டில் வென்றிருந்தது. இந்தத் தடவை அந்தக் கூட்டணியை அதிமுக முறித்துவிட்டது. இந்த நிலையில் தமிழ்நாட்டில் பா'ஜகவின் நிலையை ஆராய்கின்றது இந்தக் கட்டுரை.

**நிவேதா தனிமொழி**

தமிழ்நாட்டில் பாரதீய ஜனதாக் கட்சி சார்பாக அனைத்துத் தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், இந்தப் பட்டியல் உணர்த்தும் செய்திகள் என்ன?

பாஜக தமிழ்நாட்டில் வளர்ந்துள்ளதா? தமிழ்நாட்டில் பாஜக வளர்ந்தது போல் கட்டமைக்க நினைக்கிறதே தவிர, வேட்பாளர்களைக் களமிறக்குவதில் சற்றே திணறியிருக்கிறது என்னும் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. குறிப்பாக, கடந்த பெப்ரவரி மாதம் மத்தியப் பிரதேச ராஜ்யசபா நாடாளுமன்ற உறுப்பினராக முருக னுக்கு இடம் வழங்கப்பட்டது. இந்த நிலையில், அவர் இந்தத் தடவை நீலகிரி மக்களவைத் தொகுதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல், தெலங்கானா மற்றும் புதுச்சேரி ஆளுநராக இருந்த தமிழிசை சவுந்தரராஜனுக்கு தென் சென்னையில் இடம் வழங்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி தொகுதி எம்.எல்.ஏவாக இருக்கும் நயினார் நகேந்திரனுக்கு திருநெல்வேலி மக்களவையில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி தொகுதியில் தற்போது மாநில அமைச்சராகவுள்ள நமச்சிவாயம்தான் பாஜக வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கிறார். நாமக்கல் தொகுதி வேட்பாளராகக் களமிறக்கப்பட்டிருக்கும் கே.பி.ராமலிங்கம். தேர்தலில் போட்டியிட விருப்பமில்லை. ஆனால், கட்சி கட்டாயப்படுத்தியதால் போட்டியிடுகிறேன் என்கிறார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இப்படியாக, தமிழ்நாட்டில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்வில் சற்று சறுக்கலைச் சந்தித்துள்ளது பாஜக. அதேபோல், மாநிலத்தில் ஒரு சட்டப்பேரவை உறுப்பினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கூட இல்லாத தமிழ் மாநில காங்கிரஸ்"க்கு 3 இடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல், ஒரு தொகுதிதான் கேட்டேன். ஆனால், பாஜக இரண்டு தொகுதிகளை ஒதுக்கியது என்று டிடிவி தினகரன் (சசிகலாவின் உறவினர்) செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இப்படியாக, 39 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை நிறுத்துவதில் பாஜக தடுமாறியிருக்கிறது. குறிப்பாக, சரியான வேட்பாளர்கள் இல்லாததால் சட்டப்பேரவை உறுப்பினர்கள், ஆளுநர் பதவி வகித்தவர், மத்திய அமைச்சர்களைக் களமிறக்கியிருக்கின்றனர் என்னும் கருத்துகள் சொல்லப்படுகின்றன.

**பட்டியலில் பாஜக வளர்ச்சி! –**

பொதுவாக, கூட்டணி அமைத்திருக்கும் தலைமை கட்சி அந்தக் கட்சியினர் பட்டியலை மட்டும்தான் தங்களின் கடிதத் தலைப்பில் வெளியிடும். மற்ற கூட்டணிக் கட்சிகள், கூட்டணியைத் தலைமை தாங்கும் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டாலும்கூட, தங்கள் கட்சியின் கடிதத் தலைப்பில்தான் வேட்பாளர் பட்டியலை அதிகாரபூர்வமாக அறிவிக்கும். ஆனால், பாஜக இந்த நடைமுறைக்கு நேரமாறாகக் கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை தாமரைச் சின்னத்தில் போட்டியிடுவதால் தங்கள் கட்சி வேட்பாளர்களைப் போல் அறிவித்தது.

குறிப்பாக, முதல்கட்ட வேட்பாளர் பட்டியலில், 'வேலூர் தொகுதியில் புதிய நீதிக் கட்சி வேட்பாளர் ஏ.சி.சண்முகம் மற்றும் பெரம்பலூர் தொகுதியில் இந்திய ஜனநாயக கட்சி வேட்பாளர் பாரிவேந்தர் ஆகியோர் பெயர்களும், இரண்டாம் கட்ட வேட்பாளர் பட்டியலில் சிவகங்கை தொகுதியில் இந்திய மக்கள் கல்வி முன்னேற்ற கழகம் வேட்பாளர் தேவநாதன் மற்றும் தென்காசி தனித் தொகுதியில் போட்டியிடும் தமிழக மக்கள் முன்னேற்றக் கழக வேட்பாளர் ஜான் பாண்டியன்' ஆகியோர் பெயர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இந்தப் பட்டியலை மொத்தமாகப் பார்த்தால் 24 தொகுதிகளில் பாஜக களம் காணுவது போன்ற பிம்பம் கட்டமைக்கப்படுகிறது. திமுகவே நேரடியாக 21 தொகுதிகளில் மட்டுமே போட்டியிடுகிறது. ஆனால், பாஜக 24 தொகுதிகளில் போட்டி என எண்ணிக்கை வடிவில் தங்கள் வளர்ச்சியைக் காட்ட முயன்றிருப்பதும் இதில் தெரிகிறது.

**பட்டியலில் உள்ள அரசியல்**

அதேபோல், பாஜக வெளியிட்டிருக்கும் வேட்பாளர் பட்டியலில் ஓபிசி பிரிவைச் சேர்ந்தவர்களே இடம்பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடதக்கது. அண்ணாமலை பாஜக தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர், குறிப்பிட்ட வகுப்பினரின் கட்சி என்ற பிம்பத்தில் இருந்து வெளிவர பாஜக கட்சியில் முற்பட்ட பிரிவினர் எனச் சொல்லக் கூடியவர்கள் திட்டமிட்டு ஒதுக்கப்பட்டதாகவே பரவலாகப் பேசப்பட்டது.

தமிழ்நாட்டில், முற்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள் நடத்தும் கட்சி அரசியலுக்கு எடுபடாது என்பதால் இந்த நகர்வு முன்னெடுக்கப்பட்டது. அதுதான் தற்போது வேட்பாளர் பட்டியலில் தெரிகிறது. ஒருவர்கூட முற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் இல்லை. கடந்த தேர்தலில் வாய்ப்பளிக்கப்பட்டிருந்த எச்.ராஜாவுக்குக்கூட இம்முறை வாய்ப்பு வழங்கப்படவில்லை என்பதைப் பார்க்கும்போது இதனைப் புரிந்து கொள்ள முடியும்.

(5ஆம் பக்கம் பார்க்க..)

# ஏறாவூர் கிழக்கு புற்றுநோயாளர் பராமரிப்பு நிலையத்துக்கு காப்போம் அமைப்பு வருகை





(அஸ்ஹர் இப்றாஹிம்)

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் வழங்கி வைக்கு நோக்கில் மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பு பிரதேசத்தில் கிழக்கு புற்றுநோய் வைத்திய பராமரிப்பு நிலையத்தில் தங்கியிருந்து பராமரிப்பு மற்றும் சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளும் புற்றுநோயாளர்களை பார்வையிட்டதுடன் அவர்களுக்கான உதவிகளையும் காப்போம் அமைப்பு வழங்கியிருந்தது,

இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்காகவும் பராமரிப்பு நிலையத்தைப் பார்வையிடுவதற்காகவும் காப்போம் அமைப்பின் விஷேட அழைப்பின் பேரில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி முரளீதரன் கலந்துகொண்டமை சிறப்பம்சமாகும்,

திருகோணமலையில் இருந்தாலும் , நாட்டின் சகல பாகங்களிலும் இருக்கக்கூடிய தேவையுள்ள மக்களை நாடிச்சென்று மனிதாபிமான உதவிகளை வாரி வழங்கும் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனமாக "காப்போம்" நிறுவனம் செயற்பட்டுவருகின்றது. அதன் ஓர் அங்கமாகவே இந்த நிலையத்துக்கான வருகையும் அமைந்திருந்தது. (05)

# தமிழ்நாட்டில்...



(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இந்திய அளவில் 'ஏனைய பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்' (ஓபிசி) அரசியலைக் கையிலெடுத்து செயல்படுத்தி வருகிறது பாஜக. அது 2021ம் ஆண்டு தமிழகத்தில் அண்ணாமலை பொறுப்பேற்றது முதல் தொடங்கிவிட்டது. இந்த அடிப்படையில்தான் பாஜக பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

திமுகவே 21 தொகுதிகளில்தான் போட்டியிடுகிறது. ஆனால், 24 தொகுதிகளில் பாஜக போட்டியிடுகிறது. எனவே, தமிழகத்தில் அண்ணாமலை மேற்கொண்ட யாத்திரை தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதாகவே பாஜக சார்பாக வாதங்கள் வைக்கப்படுகின்றன. ஆனால், இந்த வாதங்கள் ஏற்படுத்தப்போகும் தாக்கம் என்னவாக இருக்கும்? பாஜகவின் இந்தக் கட்டமைப்புகளால் தமிழகத்தில் வாக்கு அறுவடை செய்ய வாய்ப்பு இருக்குமா என்பதை தேர்தல் முடிவுகள் சொல்லும். நிழலா அல்லது நிஜமா தெரிய வரும் நாள் ஜூன் 4. காத்திருப்போம்.

நன்றி: தமிழ் இந்து திசை

## ஈச்சம் பழங்கள் அன்பளிப்பு

(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை சமூக மேம்பாட்டுக்கான அமைப்பின் ஸ்தாபகரும் பிரபல சமூக செயற்பாட்டாளருமான அஸ்மி யாஸீன் பிராந்தியத்தில் பல்வேறு சமூக நல உதவிகளை செய்து வருகின்றார். அதன் அடிப்படையில் புனித ரமழானை முன்னிட்டு தென்கிழக்கு பல்கலைக்கழக பிரயோக விஞ்ஞான பீட கல்விசாரா ஊழியர்களின் அமைப்பான நவ்ஸ் எனும் அமைப்புக்கு ஒரு தொகுதி ஈத்தம் பழங்கள் அன்பளிப்புச் செய்தார்.

சமூக செயற்பாட்டாளர் அஸ்மி யாஸீன் அவர்களது சார்பில் அமைப்பின் முக்கியஸ்தர்களான சம்மாந்துறை தேசிய பாடசாலையின் பிரதி அதிபரும் அமைப்பின் ஆலோசகருமான எம்.சி. பர்ஷான் மற்றும் சமூக மேம்பாட்டுக்கான அமைப்பின் அமைப்பாளர் ஏ. அபூ பக்கர் ஆகியோர் குறித்த ஈத்தம் பழங்களை நவ்ஸ் அமைப்பின் தலைவர் எம்.ஏ. றிபாயிஸ் முகம்மட் ஊடாக ஊழியர்களுக்கு வழங்கி வைத்தனர். (05)

## 'சிறந்த எழுத்தாளர்' விருது பெற்றார் கலாபூஷணம் ஸக்கியா சித்தீக் பரீட்

*(எம்.எஸ்.எம்.ஸாகிர் )*

*இந்திய இலங்கை நட்புறவு ஒன்றியம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டியில் நடத்திய 'மலையகம் 200' விருது வழங்கும் நிகழ்வின் போது, கலாபூஷணம் ஸக்கியா சித்தீக் பரீட் சிறந்த எழுத்தாளருக்கான விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.*

*ஓய்வுபெற்ற ஆசிரியையும் பன்னூலாசிரியரும், இலக்கிய ஆளுமையுமான இவர், முன்னாள் ஆளுநரும், முன்னாள் மத்திய மாகாண சபை முதலமைச்சருமான சரத் ஏக்கநாயக்க உட்பட அதிதிகளிடமிருந்து இவ்விருதைப் பெற்றுக்கொண்டார். (05)*




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நீர் வழங்கல் வடிகால் அமைப்பு ஊழியர்சங்க 17 ஆவது மாநாடு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு ஊழியர் சங்கத்தின் 18 ஆவது வருடாந்த மாநாடு கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தேசிய தொழிற்சங்க நிலையத்தின் தலைவர் தோழர் லால்காந்த மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு ஊழியர் சங்கத்தின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க தலைமையில் நடைபெற்றதோடு, செயலாளர் எஸ்.டி. நீல் லீலாரத்ன தோழர்களின் பங்கேற்புடன் இந்த மாநாடு நடைபெற்றது. இதில் நாடு தழுவிய குடிநீர் வழங்கல் வாரிய உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். (05)

# வெருகல் கட்டையாறு பாலம் திறந்து வைப்பு

(ஹஸ்பர் ஏ.எச்)

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அமைக்கப்பட்ட வெருகல் பிரதேச செயலக பிரிவிற்குப்பட்ட கட்டையாறு பாலம் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனால் திறந்துவைக்கப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி குழுத்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கபில நுவன் அத்துகோரல, வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ், வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகஸ்தர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (05)



# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரி யார்?

## கிண்ணியா நகர சபை முன்னாள் உறுப்பினர் கேள்வி

(ஹஸ்பர் ஏ.எச்)

2019 ஏப்ரல் 21 அன்று வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அப்பாவி பொது மக்கள் 269 பேரின் உயிர்களைக் காவு கொள்ள காரணமான ஈஸ்டர் தற்கொலை தாக்குதலின் பிரதான சூத்திரதாரி யார் என கிண்ணியா நகர சபையின் முன்னாள் உறுப்பினர் எம் எம் மஹ்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே அவரால் மேற்படி கேள்வி எழுப்பப் பட்டுள்ளது.

தொடர்ந்தும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

கடந்த காலங்களில் சிறுபான்மை முஸ்லிம் சமூகத்தை பெரும்பான்மை மக்களினதும் நாட்டினதும் எதிரிகளாக சித்திரித்துக் காட்டுவதன் மூலம் அரசியல் இலாபம் தேடுகின்ற திட்டமிட்ட செயற்பாடுகள் தொடராக அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருந்தன.

அதன் அடிப்படையில் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட ஒரு கொடூர சம்பவமே இந்த ஈஸ்டர் தாக்குதலாகும்.

இவ்வாறான ஒரு தாக்குதலை நடாத்துவதற்கு முஸ்லிம் சமூகத்திற்கு எந்த ஒரு தேவையும் இருக்கவில்லை.

இருந்தாலும் நிரபராதிகளான அப்பாவி முஸ்லீம் சமூகம் அநியாயமாக குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டதோடு உயிர்கள், பல கோடி சொத்துக்கள் என பாரிய அழிவுகளுக்கும் முகம் கொடுத்தனர்.

எனவே பிரதான சூத்திரதாரியை தனக்கு தெரியும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் கூறுவதன் அடிப்படையில் துரிதமாக விசாரணையை நடத்தி உண்மையான சூத்திர தாரியை நாட்டு மக்களுக்கும் தெரியப்படுத்துவதோடு உரிய தண்டனையை வழங்கவும் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## புன்னாலைக்கட்டுவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



புற்களை ஏற்றிக் கொண்டிருந்த விவசாயி மீது லொறி மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

பலாலியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த லொறி வேகக் கட்டுப்பாட்டை இழந்ததில் குறித்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தின் போது லொறியில் பயணம் செய்த சாரதி உட்பட மூவர் மது போதையில்இருந்துள்ளனவும் இதனால் வீதியில் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிறிய ரக உழவியந்திரத்துடன் நிலை தடுமாறி மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதன் போது வீதியிலிருந்த மின்கம்பம், தொலைத்தொடர்பு கம்பம் என்பன முற்றாக உடைந்து சேதமடைந்துள்ளதுடன் பாரிய மரம் ஒன்றும் முறிந்து விழுந்துள்ளது.

சம்பவத்தில்ஈவினைகிழக்கு புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த(65)வயதுடையசீனியர் இராஜன் என்பவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார். விபத்துச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ஜனாதிபதித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினை உள்ளதா என்ற கேள்விக்கு பிரச்சினைகள் காணப்பட்டாலும் நாங்கள் உரிய விதத்தில் நாங்கள் அவற்றைகையாண்டு தேர்தலை நடத்தவேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற தேர்தலை நடத்தவேண்டியுள்ளதால் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதில் எந்த தாக்கமும் ஏற்படாது அது உரியநேரத்தில் இடம்பெறும் எனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிதேர்தல் செப்டெம்பர் 17 திகதி முதல் ஒக்டோபர் 17ஆம் திகதிக்குள் நடைபெறும் ஜூலை மாத இறுதியில் அல்லது ஆகஸ்ட்மாதத்தில் இது குறித்த அறிவிப்பை வெளியிடுவோம் எனவும் அவர்தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

## கல்வி, ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கராபிட்டியவில் நிர்மாணிக்கப்பட்ட 'ஜேர்மன் - இலங்கை நட்புறவு புதிய பெண்கள் வைத்தியசாலையை மக்களின் பாவனைக்காகத் திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: முன்னர், நமது மருத்துவர்களுக்கு மலேரியாவுக்கு எதிராக போராட வேண்டியிருந்தது. ஆனால் தற்போது முதியோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும், பல்வேறு நோய்கள் ஏற்படுவதாலும் சுகாதாரத்துறையின் சவால்கள் அதிகரித்துள்ளன. எனவே, சுகாதார சேவை அதற்கேற்ப மாற்றப்பட வேண்டும்.

இந்த நாட்டில் கல்வி முறையும் மாற்றத்திற்கு உள்ளாக வேண்டும். இதுவரை, கல்வி மற்றும் சுகாதாரத்திற்கான மூலதனச் செலவு குறைவாகவே ஒதுக்கப்பட்டது. முன்னர் சுகாதாரம் மற்றும் கல்விக்கு போதுமான பணம் செலவிடப்படவில்லை. போருக்குப் பெருமளவு பணம் ஒதுக்க வேண்டியேற்பட்டதே அதற்குக் காரணம்.

இரண்டாவதாக, அதிக அளவு கடன் வாங்கியிருப்பதால், அதிக பணத்தை வட்டியாகச் செலுத்த நேரிட்டுள்ளது. 1980 - 1989 களில் நான் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் கல்விக்காக அதிக நிதி ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுத்தேன். ஆனால் பின்னர் பல்வேறு காரணங்களால் கல்விக்காக அதிக பணம் செலவிட வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால் எதிர்காலத்தில் நாம் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த காலத்தில் அதிக அளவில் கடன் வாங்க நேரிட்டதால், எங்கள் வருமானத்தில் 50சதவீதம் கடன் மற்றும் வட்டிக்காகச் செலவிடப்படுகிறது. இவ்வருட வரவுசெலவுத் திட்டத்தில் 07 டிரில்லியனுக்கும் மேல் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 3.9 டிரில்லியன் கடனை திருப்பிச் செலுத்த ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் மூன்றில் ஒரு பங்கு கடனைத் திருப்பி செலுத்தவும், மூன்றில் இரண்டு பங்கு வட்டியைச் செலுத்தவும் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், 1.2 டிரில்லியன் சம்பளத்திற்காக செலவிடப்படுகிறது. மூலதனச் செலவுகளை ஒதுக்கிய பின்னர், மிகக் குறைவான தொகையே எஞ்சுகிறது. நீர்ப்பாசனம் உள்ளிட்ட பணிகளுக்கு நிதி ஒதுக்க வேண்டும்.

இவ்வாறு நாம் தொடர்ந்து பயணிக்க முடியாது. அதனால்தான் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவை உடனடியாக மறுசீரமைப்பு பணிகளை முன்னெடுக்குமாறு எங்களுக்குத் தெரிவித்தன. இந்த ஆண்டுக்கான செலவினங்களுக்குத் தேவையான பணத்தை நாட்டிற்குள் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் முதல் முடிவாகும். நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதில் இது முக்கியமான முடிவாகும். எக்காரணத்திற்காகவும் இனி பணம் அச்சிட முடியாது. மேலும், அரசு வங்கிகளில் பணம் பெற முடியாது. நாட்டிற்குள் இருந்து தேவையான வருமானத்தை ஈட்டிக்கொண்டு, முன்னேற வேண்டும்.

இதில் எமக்கிருந்த ஒரே வழி வரியை உயர்த்துவதுதான். இதற்காக அனைவரும் எங்களைக் குற்றம் சாட்டினார்கள். ஆனால் இந்த நடவடிக்கையால், முதல் முறையாக வரவு செலவுத்திட்டத்திற்காக பணத்தை அச்சிட வேண்டிய தேவை ஏற்படவில்லை. அனைவரும் எதிர்கொள்ளும் சிரமங்களை நாம் அறிவோம். ஆனால் வரி அதிகரிப்பால் இன்று வரவு செலவுத் திட்டத்திற்காக கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்படவில்லை. அதன் பெறுபேறுகளை இன்று நாட்டில் காண முடிகிறது. டொலருக்கு நிகராக 370 ரூபாயாக இருந்த ரூபாயின் பெறுமதி, தற்போது 300இற்கும் குறைவாகச் சரிந்து, ரூபாய் வலுப்பெற்றுள்ளது. எதிர்காலத்தில் மேலும் ரூபாய் வலுவடையும்.

மேலும் பணவீக்கம் குறைவதால் வட்டி வீதத்தைக் குறைக்க முடியும். அப்போது தொழிற்துறைகள் முன்னேற்றமடையும். தொழிற்துறை வளர்ச்சியால் நாடு முன்னேற்றமடையும். கஷ்டமாக இருந்தாலும், எடுத்த தீர்மானங்களினால் நாடு இன்று பயனடைந்துள்ளது. மேலும், அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை அதிகரித்துள்ளோம். குறைந்த வருமானம் பெறும் அஸ்வெசும பயனாளிகளின் எண்ணிக்கையை மூன்று மடங்காக உயர்த்தியுள்ளோம். இதனுடன் தனியார் துறையிலும் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த வேலைத் திட்டத்தை நாம் தொடர்ந்து முன்னெடுத்தால், அடுத்த 02 வருடங்களில் நாம் செலுத்த வேண்டிய கடன் தொகை படிப்படியாக குறையும். அந்த பணத்தை நாட்டின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்தலாம்.

கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளை நவீனமயப்படுத்தாமல் எதிர்காலம் குறித்து நம்பிக்கை வைக்க முடியாது. 1930களில் கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் ஏற்பட்ட முன்னேற்றத்தால் நாம் முன்னேறினோம். 1980களில், கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் நாங்கள் முன்னேறினோம். இன்று இலங்கையில் மாத்திரமன்றி ஐக்கிய இராச்சியத்திலும் எமது மருத்துவத் துறையினரால் சுகாதார முறைமை இயங்கி வருகின்றது. எனவே, சுகாதாரம் மற்றும் கல்வித் துறைக்கு தேவையான பணத்தை நாமே உருவாக்கி அந்த துறைகளில் துரித முன்னேற்றத்தை ஏற்படுத்துவோம்.' என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## பதவி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீழ்ச்சியடைந்தது. மேலும், 1971 இல், டிரில்லியன் டொலர் பணம் அழிக்கப்பட்டது.

1987 மற்றும் 1988 இல் ஏற்பட்ட பயங்கரமான சூழ்நிலையால் ஏராளமான உயிர்கள் அழிக்கப்பட்டன. மேலும் பொருளாதாரமும் மிகவும் பாதிக்கப்பட்டது. பௌத்த தேரர்கள், பொலிஸார் மற்றும் ஏனைய பாதுகாப்புப் படையினர், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலர் கொல்லப்பட்டனர். கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தரவும் கொல்லப்பட்டார். ஏராளமான ஊடகவியலாளர்கள், மதத் தலைவர்கள் மற்றும் மிகவும் திறமையான தோட்ட முகாமையாளர்களை நாடு இழந்தது.

இந்த நிலையில்தான் நாம் சண்டை பிடித்துக்கொண்டது போதும். நாம் அனைவரும் ஒன்றிணைந்து கருத்து வேறுபாடுகளை களைந்து தேசியக் கொள்கைகளுக்காக ஒன்றுபட வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பரிந்துரையொன்றை முன்வைத்தார்.

இப்போதும் அது நாடாளுமன்றத்தில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட சட்ட மூலங்களில் தேசிய கொள்கை குறிப்பிடப்பட்டுள்ளது. ஊழல் மற்றும் முறைகேடுகளைத் தடுப்பதற்காக ஆசியாவிலேயே மிகவும் சக்திவாய்ந்த நிதிக் கட்டுப்பாட்டு சட்ட மூலங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டுள்ளன.

பணப் பயன்பாட்டையும் சட்டக் கட்டமைப்பில் சேர்த்துள்ளோம். எனவே, திருடன், திருடன் என்று யாருக்கும் சொல்ல முடியாது. அனைவருக்கும் சமமான சட்டத்தை அமுல்படுத்துவதே எமது நோக்கம் என்பதைக் கூற வேண்டும். அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை கையாள்வது தொடர்பில் மேலும் சில விசேட சட்ட மூலங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். இலங்கை வங்குரோத்தானதை அடுத்து, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இனி பணத்தை அச்சிட முடியாது என்று அறிவித்தார். ஆனால் விருப்பமின்றியேனும் நாட்டின் வரி வருவாயை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எத்தனை சிரமங்கள் இருந்தாலும் மக்களுக்கு நிவாரணம் வழங்க மறக்கவில்லை. அஸ்வெசும பலன்கள் ரூ.15,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், அரச ஊழியர்களின் சம்பளம் பத்தாயிரம் ரூபாவினால் உயர்த்தப்பட்டது. இந்நாட்டில் இருபது இலட்சம் பேருக்கு காணி உறுதிப் பத்திரம் வழங்கும் உறுமய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மிகக் குறுகிய காலத்தில் இவ்வாறான பணிகளைச் செய்தார். ஆறு வருடங்கள் மற்றும் பன்னிரண்டு வருடங்கள் இந்த நாட்டின் ஜனாதிபதிகளிடம் நாடு ஒப்படைக்கப்பட்டது. இவர்கள் அனைவரையும் விட தற்போதைய ஜனாதிபதி இந்த குறுகிய காலத்தில் செயற்பட்ட விதத்தை வேறு எந்த ஜனாதிபதியாலும் ஈடு செய்ய முடியாது. அந்த ஜனாதிபதிகள் வங்குரோத்தான நாட்டில் செயற்படவில்லை. இதன் காரணமாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் போது அனைவரும் அவரைப் பலப்படுத்தி ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டும்.

எதிர்காலத்தில் அவரை எப்படி பயன்படுத்திக் கொள்வது என்பது குறித்தும் சிந்திக்க வேண்டும். இந்தப் பயணம் மாறினால், மீண்டும் பெற்றோல், கேஸ் சிலிண்டர்களுடன் வீதியில் வரிசையில் நிற்கும் யுகம் உருவாகும். எனவே, மக்கள் கவனமாகச் செயல்பட வேண்டும்.

நாட்டில் தற்போதைய அரசியல் செயற்பாடுகளை சீர்குலைத்து வெறுப்பு அரசியலில் ஈடுபடும் குழுக்கள் உள்ளன. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள சகல சக்திகளிலிருந்தும் இலங்கையை விடுவித்து, ஆசியாவின் வளர்ந்த நாடாக உயர்த்த வேண்டுமானால், இந்நாட்டின் பொதுமக்கள் இவ்விடயத்தில் கவனமாகச் செயற்பட வேண்டும்.

அரசமைப்பின்படி ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும், அதன் பின்னர் அரசமைப்பின்படி பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

தேர்தலை ஒத்திவைப்பதற்காக தேர்தல் திருத்தங்கள் கொண்டு வரப்படவில்லை. வேறு கோசங்கள் இல்லாததால் தான் தேர்தலை நடத்துவதில்லை என்ற கோசத்தை எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. நாட்டின் வங்குரோத்து நிலை நீக்கப்பட்டு வரும் நிலையில், எதிர்க்கட்சிகளுக்கு இப்போது கோசங்கள் இல்லாமல் போய்விட்டன.

கடந்த மூன்று ஆண்டுகளாக புத்தாண்டை கொண்டாடும் வாய்ப்பு மக்களுக்கு இருக்கவில்லை. ஆனால் இம்முறை புத்தாண்டை கொண்டாடும் சூழலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உருவாக்கியுள்ளார். அவர் இந்த நாட்டை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்பியுள்ளார். அவர் அனைத்து மக்களின் நன்றிக்கு தகுதியானவர் என்றார்.


**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**

**076 3983858**

**மின்னஞ்சல் முகவரி:**
kalaikkathirnews@gmail.com





காலைக்கதிர்
Kalaikkathir

# மாணவர்களுக்கு மதிய உணவு வழங்குவதில் கடும் பாரபட்சம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விசனம்





ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் காலத்தில் பாடசாலை மாணவர்களை பலப்படுத்துவதற்காக சீருடை மற்றும் மதிய உணவு வழங்கப்பட்ட போதிலும் தற்போது ஆரம்ப பிரிவு பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் மதிய உணவு வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இது வெட்கக்கேடான கொள்கை. ஒரே பாடசாலையில் பயிலும் மாணவர்களை பிரித்து வகைப்படுத்தக் கூடாது. ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அவ்வாறான வகைப்படுத்தலை மேற்கொள்ளாமல் சகல மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுப் வேலைத்திட்டத்தின் கீழ், 134 ஆவது கட்டமாக 10 லட்சம் ஷரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் அம்பந்தோட்டை,தங்கல்ல கொடவாய மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு மார்ச் 25 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்நிகழ்வில், கல்லூரியின் நடனம் மற்றும் அரங்கேற்றங்கள் குழுவினருக்குத் தேவையான ஆடைகளை பெறுவதற்குத் தேவையான ஒரு லட்சம் ஷரூபா நிதியையும் நன்கொடையாக வழங்கி வைத்தார்.

மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் இந்நாட்டு பிள்ளைகள் வேலை பார்க்க வேண்டும் என்பது தமது கனவாகும். சாப்ட்வேயர் இன்ஜினியர்களின் சொர்க்க பூமியாக எமது தேசத்தை மாற்ற வேண்டும் என்ற கனவு நமக்கும் இருக்கிறது.

இதற்கு ஆங்கில அறிவும் தகவல் தொழிநுப்ப கணினி அறிவும் தேவை. சிங்களம் மட்டும் தமிழ் மட்டும் என்ற எல்லைகளுக்குள் சுருங்கிக் கொள்வதால் இந்த கனவை அடைய முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டில் நியமிக்கப்பட்ட ஆட்சியாளர்கள் காலத்திற்கு ஏற்ற சரியான கல்வி முறையை வழங்காமை சிறுவர்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார். (05)

# வடக்கு, கிழக்கு மத தலங்களை இலக்குவைத்து நிகழும் நில அபகரிப்புகளால் சமூகங்களுக்கிடையில் பதற்றம்

## பிரிட்டனின் பொதுநலவாய, அபிவிருத்தி அலுவலகம் சுட்டிக்காட்டு

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்ந்தும் கரிசனைக்குரியதாகவே காணப்படுகின்றது. நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அடக்குமுறைகளுக்கும் முகங்கொடுத்துவருகின்றன. அதுமாத்திரமன்றி அப்பகுதிகளில் கரிசனைக்குரிய மட்டத்தில் காணி அபகரிப்புக்கள் அதிகரித்துவருவதுடன், சிலவேளைகளில் அவை மத வழிபாட்டுத் தலங்களை இலக்குவைத்தவையாகக் காணப்படுகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் சமூகங்களுக்கு இடையில் பதற்றத்தைத் தோற்றுவித்துள்ளன என்று பிரிட்டனின் பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகம் தெரிவித்துள்ளது.

பிரிட்டனின் பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகத்தால் கடந்த ஆண்டு ஜூலை மாதம் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக அறிக்கை வெளியிடப்பட்டது. அந்த அறிக்கை குறிப்பாக மனித உரிமைகள் அல்லது ஜனநாயக ரீதியிலான சவால்களுக்கு முகங்கொடுத்திருக்கும் 32 நாடுகளைப் பட்டியலிட்டிருந்தது. அதன்படி 2023 ஆம் ஆண்டு ஜனவரி 1 – ஜூன் 30 வரையான 6 மாதகாலப்பகுதியில் அந்த 32 நாடுகளின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக நிலைவரம் தொடர்பில் ஆராய்ந்து வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையிலேயே பிரிட்டன் பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகம் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளது.

புதுப்பிக்கப்பட்ட அந்த அறிக்கையில் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகநிலைவரம் தொடர்பில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு –

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்ந்தும் கரிசனைக்குரியதாகவே காணப்படுகின்றது.

தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத்தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்வதை முன்னிறுத்திய பல்வேறு முயற்சிகளுக்கு மத்தியிலும், அச்சட்டம் தொடர்ந்து பயன்படுத்தப்படுவதுடன் கருத்து வெளிப்பாடு மற்றும் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தை மட்டுப்படுத்தும் ஏனைய சட்டங்களும் பிரயோகிக்கப்பட்டுவருகின்றன. அதேபோன்று அமைதியான முறையில் நடத்தப்பட்ட போராட்டங்கள் மற்றும் நினைவுகூரல் நிகழ்வுகள் கடுமையான முறையில் அடக்கப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

அதேபோன்று நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் சமூகங்கள் பாதுகாப்புத்தரப்பினரின் தொடர் கண்காணிப்புக்கும், ஒடுக்குமுறைகளுக்கும் முகங்கொடுத்துவருகின்றன. அதுமாத்திரமன்றி அப்பகுதிகளில் கரிசனைக்குரிய மட்டத்தில் காணி அபகரிப்புக்கள் அதிகரித்துவருவதுடன், சிலவேளைகளில் அவை மத வழிபாட்டுத் தலங்களை இலக்குவைத்தவயாகக் காணப்படுகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் சமூகங்களுக்கு இடையில் பதற்றத்தைத் தோற்றுவித்துள்ளன.

உண்மை மற்றும் நல்லிணக்க விவகாரத்தில் முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கான கடப்பாட்டை இலங்கை கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதெனினும், அதனை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்கள் எவையும் 2023 ஜூன் மாதமளவில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரில் நாம் சமர்ப்பித்த அறிக்கையில் யுத்தத்துக்கும், தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்குக்கும் வழிவகுத்த அடிப்படைக் காரணிகளைக் கண்டறிந்து களைவதற்குரிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவேண்டும் எனவும், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், அனைவரையும் உள்ளடக்கிய தன்மை என்பன பேணப்படவேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தோம் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(05)

# கொள்ளையர்கள் மீது பொலிஸ் துப்பாக்கிசூடு

## ஒருவர் சாவு இருவர் தப்பியோட்டம்

நாரம்மல பகுதியில் கொள்ளையர்கள் குழு மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி துப்பாக்கி சூட்டில் மேலும் இரு கொள்ளையர்கள் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆப்பிள் ஐபோன் விற்பனை தொடர்பில் பத்திரிகையில் வெளியிட்ட விளம்பரங்களை அடுத்து கையடக்கத் தொலைபேசிகளைக் கொள்வனவு செய்ய வந்தவர்களிடம் இருந்து கொள்ளையர்கள் பணத்தைத் திருட முயற்சித்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி விளம்பரத்தைப் பார்த்து ருவன்வெல்ல பகுதிக்கு கையடக்கத் தொலைபேசிகளைக் கொள்வனவு செய்ய வந்தவர்களுக்கு விளம்பரம் தொடர்பில் சந்தேகம் ஏற்பட்ட நிலையில், பொலிஸாருக்கு அறிவித்து பொலிஸ் அதிகாரிகளுடன் கொள்ளையர்களை சந்திக்கச் சென்றுள்ளனர்.

நாரம்மல பகுதியிலுள்ள இடத்திற்கு வருமாறு கொள்ளையர்கள் தெரிவித்ததோடு, குறித்த இடத்தை அடைந்ததும் கொள்ளையர்கள் அவர்களது காரை கூரிய ஆயுதங்களால் தாக்கியுள்ளனர். இதனையடுத்து பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் ஏற்பட்ட கைகலப்பின் போது, பொலிஸ் அதிகாரி ஒருவர் கொள்ளையர்களை நோக்கி துப்பாக்கிசூட்டை நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதில் ஒரு கொள்ளையர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். இரண்டு கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளனர். (05)

# ஐ.தே.க. வட்டார அமைப்பாளராக டிலிப் மருதமுனைக்கு நியமனம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

ஐக்கிய தேசிய கட்சியின் மருதமுனை 04 மற்றும் 05 ஆம் வட்டாரங்களுக்கான அமைப்பாளராக டிலிப் நௌசாத் அபூபக்கர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தலைவரான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் கட்சியின் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவால் தெரிவு செய்யப்பட்டு, அவரது கையொப்பமிடப்பட்ட நியமனக் கடிதத்தை முன்னாள் பிரதி அமைச்சர் அனோமா கமகேவிடம் இருந்து இவர் பெற்றுக் கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்ட கால செயற்பாட்டாளரான டிலிப் நௌசாத், பொது அமைப்புகள் ஊடாக சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார். விஞ்ஞான பட்டதாரியான இவர் கல்முனை மாநகர சபையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றி வருகின்றார்.

இவர் மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபரான மர்ஹூம் முஹம்மது அபூபக்கரின் கனிஷ்ட புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# அழகு சாதன விற்பனை நிலையங்களில் கொழும்பு அதிகாரிகள் கடும் சோதனை

## பதிவு செய்யப்படாத தோல் சிகிச்சை மருந்துகள் சிக்கின

இலங்கை தோல் வைத்திய நிபுணர்களின் சங்கம் விடுத்த எச்சரிக்கையை அடுத்து செவ்வாய்க்கிழமை கொழும்பில் உள்ள பல முன்னணி அழகு சாதன பொருள்களின் விற்பனை நிலையங்களில் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபையின் உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர்கள் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இதன் போது, பதிவு செய்யப்படாத தோல் சிகிச்சை மருந்துகள் விற்பனை செய்யப்படுவதைக் கண்டறிந்துள்ளனர்.

இவ்வாறு விற்பனை செய்தவர்கள் கொழும்பு புறக்கோட்டையில் அழகு சாதனப் பொருள்களின் மொத்த விற்பனை நிலையங்களில் பதிவு செய்யப்படாத தோல் சிகிச்சை மருந்துகளைக் கொள்வனவு செய்ததாகத் தெரிவித்ததாக தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து கதிரேசன் வீதியில் உள்ள இரண்டு அழகுசாதனப் பொருள்களின் மொத்த விற்பனை நிலையங்களை சோதனை செய்ததில் 470 இற்கும் மேற்பட்ட தோல் சிகிச்சை மருந்துகளைக் கண்டுபிடித்தனர். குறித்த மருந்துகள் வைத்தியர்களின் பரிந்துரையில் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும். இது ஓர் எளிமையான அழகுசாதனப் பொருள் அல்ல.

மூன்று மருந்து சேர்மானங்களைக் கொண்ட அத்தகைய மருந்துகளின் இரண்டு வகைகள் கைப்பற்றப்பட்டன. ஹைட்ரோகுவினோன், ட்ரெட்டினோயின் மற்றும் மொமடசோன் ஃபுரோயேட் கிரீம் ஆகியன 3 இரசாயன சேர்மானங்கள் ஆகும். அவற்றில் ஸ்டீராய்ட் மருந்தும் ஒன்றாகும்.

ஸ்டெராய்ட் மருந்துகள் உள்ளிட்ட தோல்நோய்களுக்கான மருந்துகள் கண்டிப்பாக வைத்தியரின் ஆலோசனையின் கீழ் பயன்படுத்தப்பட வேண்டும் அல்லது அது சருமத்தில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று அந்த அதிகாரி கூறினார்.

நகரத்திலுள்ள அழகு சாதனப் பொருள்களின் விற்பனை நிலையங்களில் கிடைக்கும் இவ்வகையான மருந்துகள் சருமத்தை வெண்மையாக்கும் அல்லது சுத்தப்படுத்தும் என நம்பி வாடிக்கையாளர்களை வாங்குவதற்குத் தூண்டுகிறது. இது பின்னர் அவர்களின் நிறத்தில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்துகிறது.

இவ்வகையான அழகு சாதனப் பொருள்கள் பற்றிய பல முறைப்பாடுகள் இலங்கை தோல் வைத்திய நிபுணர்களின் சங்கத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளதோடு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மருந்துகளைக் கண்டிப்பாக மருத்துவரின் ஆலோசனையின் கீழ் ஆறு வாரங்களுக்கு மாத்திரமே பயன்படுத்த வேண்டும் என்றும், தொடர்ந்து பயன்படுத்தினால் புற்றுநோய் பாதிப்புகள் ஏற்படலாம் என இலங்கை தோல் வைத்திய நிபுணர்களின் சங்கத்தின் தலைவர் வைத்தியர் ஸ்ரீயானி சமரவீர தெரிவித்துள்ளார்.

'தற்போது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அத்தகைய மருந்துகளில் ஒரே ஒரு வகை மட்டுமே உள்ளது. அந்த மருந்து மருந்தகங்களில் மட்டுமே விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. அழகு சாதன பொருள்களின் மொத்த விற்பனை நிலையங்களில் அல்ல.

மெலஸ்மா எனப்படும் தோல் நிறமிக் கோளாறுக்கு சிகிச்சையளிக்க இந்த மருந்து பயன்படுத்தப்படுகிறது மற்றும் பரிந்துரைக்கப்பட்ட காலத்திற்கு மேலதிகமாக பயன்படுத்தினால் கடுமையான தோல் பிரச்சினைகள் ஏற்படலாம், இதன் காரணமாக பல முறைப்பாடுகள் கிடைக்கின்றன, - என அவர் தெரிவித்துள்ளார். (05)

# 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் இலங்கையில் யாசகம் பெறுகின்றனர்

இலங்கையில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் யாசகம் பெறுவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளி விவரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் இந்த எண்ணிக்கை உறுதி செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இது மிகவும் ஆபத்தான நிலைமையாகும். இந்நிலைமை எதிர்காலத்தையும் பாதிக்கலாம்.

இது தொடர்பில் கவனம் செலுத்தாவிட்டால் வீதியில் யாசகம் பெறும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து போதைப்பொருள் விற்பனை, திருட்டு மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் உள்ளிட்ட குற்றச் செயல்கள் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன.

இந்த சிறுவர்களில் சிலர் தங்களது பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களால் யாசகம் பெறுவதற்கும் பணம் சம்பாதிக்கும் பிற நடவடிக்கைகளுக்கும் தள்ளப்படுவதாக ஆய்வுகளில் தெரியவந்துள்ளன.

4 முதல் 15 வயதுக்கு உட்பட்ட பெரும்பாலான சிறுவர்கள் பாடசாலைகளுக்கு செல்லாமல் வீதிகளிலும் புனிதத் தலங்களிலும் சன நெரிசல்மிக்க இடங்களிலும் யாசகம் பெறுகின்றனர்.

சில பெற்றோர்கள் இந்த சிறுவர்களைக் கூலி வேலைகளுக்காகவும் வீதியோர வியாபாரங்களுக்காகவும் பயன்படுத்துகின்றனர். இந்த சிறுவர்களில் சிலர் போதைப்பொருள் பாவனைக்கும் பல்வேறு குற்றச்செயல்களுக்கும் அடிமையாகி இருப்பதும் ஆய்வில் தெரிய வந்துள்ளது. (05)

# இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கும் பணியை தனியாரிடம் வழங்க திட்டம்

இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு அரசு விசா வழங்கும் முறையிலிருந்து விலகி, தனியார் நிறுவனம் ஒன்றிடம் அந்தப் பணிகளை ஒப்படைக்கும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை வெளிநாட்டவர்களுக்கு விசா வழங்கும் முறையால் அதன் முழு வருமானமும் நேரடியாகக் குடிவரவு திணைக்களத்துக்குக் கிடைத்துள்ளதாகவும், இந்தப் பணியை ஒப்படைப்பதன் மூலம் பெரும் வருமானத்தை இழக்கும் அபாயம் உள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (05)

# 53 மசாஜ் நிலையங்களுக்கு நீர்கொழும்பில் மூடு விழா

## 137 பெண்கள் கைது, இருவருக்கு எய்ட்ஸ்

*நீர்கொழும்பில் மசாஜ் நிலையங்கள் என்ற போர்வையில் இயங்கிய விபசார விடுதிகளில் பணிபுரிந்த இரு பெண்களுக்கு எச்.ஐ.வி எய்ட்ஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக வைத்திய பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.*

*இதனையடுத்து நீர்கொழும்பு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது 53 மசாஜ் நிலையங்கள் மூடப்பட்டன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.*

*மேலும் அவற்றில் பணியாற்றிய 137 பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (05)*

# சுவாமி விபுலாநந்த அடிகளின் 132ஆவது பிறந்த தின விழா

## காரைதீவில் நடந்தது





(வி.ரி.சகாதேவராஜா)

உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 132 ஆவது ஜனன தின விழா நேற்று (புதன்கிழமை) கொட்டும் மழையிலும் காரைதீவில் சிறப்பாக நடைபெற்றது.

காரைதீவு விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றத்தின் ஆலோசகர் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா தலைமையில் மணிமண்டப வளாகத்தில் நடைபெற்றது.

முதல்கட்டமாக நந்திக் கொடி ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா ஏற்றிவைத்தமையைத் தொடர்ந்து துறவறகீதம் சரணாகதி பாடல் இசைக்கப்பட்டது.

பின்னர் சுவாமியின் திருவுருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்தல் இடம் பெற்றது. பிறந்த வீட்டிலுள்ள திருவுருச்சிலைக்கு காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன், சுவாமி விபுலானந்த அடிகளாரின் பேத்தி திருமதி விஜயலக்ஷ்மி புவனராஜா ஆகியோர் மலர்மாலை அணிவிக்க, சுவாமிகளின் நின்றசிலைக்கு ஆலோசகர் வி.ரி.சகாதேவராஜா மலர்மாலை அணிவித்தார்.

சுவாமிகளின் ஈசன் உவக்கும் இன்மலர் மூன்று பாடல் இசைக்கப்பட்டது.

சுவாமிகள் பிறந்த இல்லத்தில் விஷேட வழிபாடு இடம் பெற்றது. விசேடபூஜையை பணிமன்ற செயலாளர் கு.ஜெயராஜி பஞ்சாரத்தி காட்டி நடத்தினார். விபுலானந்த நர்த்தனாலய மாணவிகளின் ஆடல் பாடல்கள் இடம்பெற்றன. அவர்களுக்கு கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச சபையின் செயலாளர் அருணாசலம் சுந்தரகுமாரும் கலந்துசிறப்பித்தார்.

இந்து கலாசார திணைக்கள மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி நன்றியுரையாற்றினார்.

நிகழ்வில் பணிமன்ற நிர்வாகிகள், ஆலய அறங்காவலர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர். (05)

# ஆடை வடிவமைப்பு பட்டப்படிப்பு மாணவி மீது துஷ்பிரயோகம்

## 80 வயதான தொழிற்சாலை உரிமையாளர் கைது

*ஆடை வடிவமைப்பு பட்டப்படிப்பு கல்வியை கற்கும் 23 வயதுடைய மாணவி ஒருவருக்குப் பட்டப் படிப்புக்குத் தேவையான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காகக் கூறி தொழிற்சாலை ஒன்றின் உரிமையாளர் ஒருவர் அந்த மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக பிலியந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.*

*ஆடை வடிவமைப்பு பட்டப்படிப்பைத் தொடரும் இந்த மாணவி , தனது படிப்பிற்குத் தேவையான திட்ட அறிக்கை ஒன்றை தயார் செய்வதற்குத் தனது காதலன் மூலம் பிலியந்தலையிலுள்ள தொழிற்சாலை ஒன்றுக்குச் சென்றுள்ளதாகப் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது .*

*இந்த மாணவியிடம் குறித்த தொழிற்சாலையின் 80 வயதுடைய உரிமையாளர் தவறான முறையில் நடந்துகொண்டதாக மாணவி தனது காதலனுக்குத் தெரிவித்துள்ளார். காதலன் இது தொடர்பாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் பிலியந்தலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)*

காலைக்கதிர் Kalaikkathir

# மழைக்கு மத்தியிலும் கல்முனையில் தொடர்கின்றது தமிழர்கள் போராட்டம்







(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான தொடர்ச்சியாக நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக அங்குள்ள பொதுமக்கள் 3 ஆவது நாளாக நேற்று (புதன்கிழமை) கடும் மழைக்கு மத்தியில் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

குறித்த பிரதேச செயலகத்தின் முன்பாக கடந்த திங்கட்கிழமை பொதுமக்கள் பல்வேறு சுலோகங்களை உள்ளடக்கிய பதாதைகளை தாங்கிய வண்ணம் அமைதி வழியில் ஒன்று கூடி போராட்டம் ஒன்றை முன்னெடுத்து இருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக 3 ஆவது நாளான இன்றும் பல்வேறு சுலோகங்களை முன்வைத்து போராட்டத்தைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டத்திற்கு வலு சேர்க்கும் முகமாக நேற்று அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் மற்றும் காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஸ்னபிள்ளை ஜெயசிறில் ஆகியோர் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கடந்த காலங்களில் உதவி அரசாங்க அதிபர் பிரிவாக செயற்பட்டு வந்த மேற்குறித்த பிரதேச செயலகம் 1988 களில் தனியான பிரதேச செயலகமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து 1993 ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் பெற்று தனியான பிரதேச செயலகமாக கடந்த 30 வருட காலமாக இயங்கி வருவதாகவும் ஊடகங்களிடம் சுட்டிக்காட்டுகின்றனர்.

இருந்தபோதிலும் ஒருசில அரசியல்வாதிகள் தொடக்கம் உயர் அதிகாரிகள் வரை குறித்த பிரதேச செயலகத்தின் மீது நிர்வாக அடக்குமுறைகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதன் காரணமாகப் பொது மக்களாகிய தாங்கள் இப்போராட்டத்தை ஆரம்பித்து உள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாகக் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம் பெற்று வரும் சூழ்ச்சிகளையும் நிர்வாக அடக்குமுறைகளையும் கணடித்தும் திட்டமிடப்பட்டு பிரதேச செயலக உரிமைகளை ஒடுக்கும் நிர்வாக அடக்குமுறைகளை இனியும் பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது எனவும் அரசாங்கம் இனியும் வாக்குறுதிகளை வழங்கி காலத்தை இழுத்தடிக்காது உடன் தீர்வை தரும் வரை தமது அமைதிப் போராட்டம் தொடரும் என மேலும் மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் குறித்த பிரதேச செயலக விடயம் தொடர்பில் இறுதியாக கடந்த 2019 ஆண்டு கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்பதற்காக உண்ணாவிரதப் போராட்டம் பல அரசியல்வாதிகள் பிரமுகர்களின் போலி வாக்குறுதிகளால் போராட்டத்தைக் கைவிடும் நிலை ஏற்பட்டிருந்தது.

மேற்குறித்த உண்ணாவிரதப் போராட்டம், அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்தி தரவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி பிரதேச செயலகத்தின் முன்னால் உண்ணாவிரத போராட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது.

இதில் கல்முனை சுபத்திராம விகாரையின் விகாராதிபதி சங்கைக்குரிய ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர், கிழக்கிலங்கை இந்துகுருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ க.கு.சச்சிதானந்தம் சிவம் குரு, கல்முனை மாநகரசபை உறுப்பினர்களான சா.சந்திரசேகரம் ராஜன் மற்றும் அழகக்கோன் விஜயரத்னம், ஐக்கிய வணிகர் சங்கத்தின் தலைவர் கிருஷ்ணப்பிள்ளை லிங்கேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டு களமிறுங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# வாய்ப் புற்றுநோயைத் தடுப்போம் திருகோணமலையில் விழிப்புணர்வு





திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகமும் திருகோணமலை பொது வைத்தியசாலையின் பிராந்திய பற்சுகாதாரப் பிரிவும் இனைந்து திருகோணமலை நகராட்சி மன்றத்தின் வேலைத்தளப்பகுதி மற்றும் சுகாதாரப் பிரிவு உழியர்களுக்கு நேற்று (புதன்கிழமை) காலை 7.00 மணிக்கு நகராட்சி மன்றத்தின் வேலைத்தளப் பகுதியில் வாய் புற்று நோயை தடுப்போம் என்ற கருப்பொருளில் கருத்தரக்கும் நடமாடும் சிகிச்சையும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு பிரதம நூலகர் ந.யோகேஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் சமூக பல் வைத்தியநிபுணர் வைத்தியர் சசிதரன், திருகோணமலை பிராந்திய பல்வைத்திய நிபுணர் திருமதி உதயலக்ஷ்மி சூரியகுமார், நடமாடும் பல் சிகிச்சை நிபுணர் வைத்தியர் கியாஸ் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர். மேலும் இந் நிகழ்வில் திருகோணமலை பொது நூலகத்தின் நூலக உதவியாளர்களான அ . அச்சுதன், பா. விபூஷிதன், உ. ரஜனிக்காந் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

# யூனியன் வங்கியின் மகளிர்தின நிகழ்வு

யூனியன் வங்கியால் மகளிர் தினத்தை முன்னிட்டு செவ்வாய்க்கிழமை யாழ் தலைமைக் காரியாலயத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

பெண்களில் முதலிடுவோம் முன்னேற்றத்தை விரைவுபடுத்துவோம் பெண்களின் பொருளாதாரத்தில் முதலிடுவோம் என்னும் தொனிப்பொருளில் மகளிர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற மற்றும் சுய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான ஆலோசணை வழிகாட்டல்களும் துறை சார்ந்த வல்லுநர்களால் வழங்கப்பட்டன.

நிகழ்வில் பொருளாதாரத்தை ஈட்டும் பெண்கள் தமது வேலைச் சூழலையும் குடும்பச் சூழலையும் சுமுகமாகக் கொண்டு செல்லல் என்னும் தொனிப் பொருளில் யுன்டிபி நிறுவன அதிகாரி வைதேகி நரேந்திரனும்

வியாபார திட்டமிடல் முன்மொழிவுகளைத் தயாரித்தலும் வியாபாரக் கணக்குகளை பேணல் தொடர்பில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் மிதிலா கௌதமனும் வங்கி கொடுக்கல் வாங்கலும் பெண்களும் என்ற தொனிப் பொருளில் யூனியன் வங்கியின் வடக்கு கிழக்கு பிராந்திய முகாமையாளர் க.நிஷாகரன் ஆகியோர் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை வழங்கினர்.

அனுபவப் பகிர்வு வன்னி கஜ/ ஜெஸ்மின் ஜெயமலர் மற்றும் வேலைத் தளத்தில் ஏற்படும் பால் நிலை சார் பிணக்குகளைக் கையாளுதல் மன அழுத்தத்தங்களைக் கையாழுதல் எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி மாவட்ட செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் உதயனி நவரட்னம் மற்றும் சட்டத்தரணி கார்த்திகா ஆகியோர் வளர்வார்களாகக் கலந்து கொண்டனர். (05)

# தமது சொந்தக் காணிகளை விடுவிக்கக் கோரி கேப்பாப்பிலவு ராணுவ முகாம்முன் போராட்டம்








முல்லைத்தீவு கேப்பாபிலவில் இராணுவத்தினர் வசமுள்ள தமது சொந்த காணிகளை விடுவிக்கக் கோரி நேற்று (புதன்கிழமை) கேப்பாப்பிலவு இராணுவ படைத் தலைமையகத்திற்கு முன்பாகக் கிராம மக்கள் கவன வீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு இராணுவ படை தலைமையகத்திற்கு இலங்கையின் இராணுவ தளபதி முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்ள இராணுவ படை தலைமையகத்திற்கு வருகை தந்திருந்தார். அவரிடம் தமது சொந்தக் காணிகளை விடுவித்து தருமாறு கோரி மகஜர் கையளிக்க குறித்த இராணுவ தலைமையகத்திற்கு முன்பாக ஒன்று கூடி கவனவீர்ப்பை வெளிப்படுத்தியிருந்தார்.

எனினும் இராணுவத் தளபதியைத் தற்போது சந்திக்க முடியாதெனவும் நேற்று மாலை 3 மணியளவில் 5 நபர்கள் சந்திப்பதற்கு ஏற்பாடு மேற்கொண்டு தருவதாகவும் இராணுவத்தினால் தெரிவிக்கப்பட்டதையடுத்து குறித்த கவனவீர்ப்பினை நிறைவுக்கு கொண்டு வந்திருந்தனர்.

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் தமது காணிகளை விரைவில் விடுவிக்கக்கோரி ஜனாதிபதிக்கும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளருக்கும் கடந்த 11.03.2024 அன்று முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்திருந்தனர். இதன்போது குறித்த கடிதத்தை தான் உரிய தரப்புக்களுக்கு அனுப்பி பத்து நாள்களில் ஒரு பதிலை பெற்று வழங்குவதாகத் தெரிவித்தார்.

இந்நிலையில் திங்கட்கிழமை கேப்பாபிலவு மக்கள் மீண்டும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து கலந்துரையாடிய போது தமது காணிகளை விடுவிப்பது தொடர்பில் உறுதியான முடிவு இதுவரை கிடைக்கவில்லை என மாவட்ட செயலாளர் தெரிவித்ததாக கேப்பாபிலவு மக்கள் தெரிவித்திருந்தனர்.

கேப்பாப்பிலவு மக்களின் ஒருபகுதியினரின் காணிகள் விடுவிக்கப்பட்ட போதிலும் பாடசாலை, ஆரம்ப சுகாதார நிலையம், ஆலயங்கள், தேவாலயம், பொதுநோக்கு மண்டபம் உள்ளிட்ட மக்களின் குடியிருப்புக்கள் இன்றும் இராணுவக் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது.

குறிப்பாக மக்களின் பயன்தரு தென்னை மரங்கள் பல குறித்த காணியிலேயே காணப்படுகின்றன. 62 நபர்களின் 171 ஏக்கர் காணிகள் தற்போது விடுவிக்கப்படாது இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

பல வருடகாலமாகத் தாம் தமது காணிகளை இழந்து சிரமங்களுக்கு மத்தியில் வாழ்வதாகவும் பல போராட்டங்கள் செய்தும் இதுவரை தீர்வு இல்லை என்றும் தமது காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறினால் மீண்டும் தொடர் போராட்டங்களில் ஈடுபடவுள்ளோம் எனத் தெரிவித்திருந்த நிலையிலே நேற்றையதினம் கேப்பாப்பிலவு இராணுவ படை தலைமையகத்திற்கு முன்பாகக் கவனவீர்ப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

# தேர்தல்களைப் பிற்போட அரசு கடும் பிரயத்தனம்

## இராமலிங்கம் சந்திரசேகர் குற்றச்சாட்டு

தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்து வருவதாக தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பின் போதே இராமலிங்கம் சந்திரசேகர் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன்றைக்கு அனைத்து கருத்துக் கணிப்புக்களிலும் தேசிய மக்கள் சக்தியே வெற்றிபெறும் என கூறப்படுகின்றது. இதனால்

தேசிய மக்கள் சக்தியின் வெற்றியைத் தடுப்பதற்கு இவர்கள் முயற்சி எடுத்து வருகின்றார்கள்.

கடந்த 76 வருட ஆட்சியாளர்களுக்கு ஒன்றைக் கூறிக்கொள்ளுகின்றோம், அவர்களுடைய சகாப்தம் முடிவுக்கு வரப் போகின்றது. எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில்

புதிய அரசாங்கம் புதிய ஜனாதிபதி தெரிவு இடம்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த ஈஸ்ரர் குண்டு தாக்குதல் தொடர்பிலும் இராமலிங்கம் சந்திரசேகர் கருத்து தெரிவித்தார். (05)

# மாதம்பையிலிருந்து கம்பளை சென்ற பஸ் தீப்பிடித்து எரிந்தது சாம்பரானது

மாதம்பையிலிருந்து கம்பளை நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸிலேயே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீயால் பஸ் சேதமடைந்துள்ளதுடன் பிரதேசவாசிகள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

பின்னர் அங்கு வந்த குருணாகல் தீயணைப்பு பிரிவினர் தீயை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். (05)

# யாழ். பல்கலையில் நாடக விழா நிகழ்வு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் அனைத்துலக நாடக விழா நேற்று(புதன்கிழமை) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

நேற்று காலை 10 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் இந் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அனைத்துலக நாடக விழாவில் பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்களின் நாடகங்கள் மற்றும் தொழில்வாண்மை நாடகக் கலைஞர்களின் நாடகங்களும் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், துறைத்தலைவர்கள், விரிவுரையாளர்கள், பொதுமக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (05)

# நடமாடும் சேவை



சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் நேற்று (புதன்கிழமை) சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடமாடும் சேவை முகாம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த நடமாடும் சேவையில் காலம் கடந்த இறப்பு,

காலம் கடந்த பிறப்பு, திருமணப்பதிவு அடையாள அட்டைக்கான விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளல், பொலிஸ் நற்சான்று பத்திரம் உள்ளிட்ட சேவைகள் வழங்கப்பட்டன. அத்துடன் இந்த நடமாடும் சேவையில் இரண்டு சட்டத்தரணிகளால் சட்ட ஆலோசனையும் வழங்கப்பட்டது.

இதில் சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் இயக்குநர் சட்டத்தரணி திருமதி அம்பிகா, சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் உத்தியோகத்தர்கள், சண்டிலிப்பாய் பிரதேச செயலர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (05)

# வாசல் சஞ்சிகை வெளியீட்டு விழா

வாசல் வாசகர் வட்டத்தின் வெளியீடான வாசல் கவிதை சஞ்சிகை வெளியீடு எதிர்வரும் சனிக்கிழமை திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு, வாசல் வாசகர் வட்டத்தின் தலைவர் ஊடகவியலாளர் அரசரெத்தினம் அச்சுதனின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு, பிரதம விருந்தினராக திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் பொன்.சற்சிவானந்தம் கலந்து கொள்ளவுள்ளதுடன், சிறப்பு விருந்தினர்களாக திருகோணமலை மாவட்டத்தின் மூத்த எழுத்தாளர்களான திருமலை சுந்தா, கவிஞர் ஷெல்லிதாசன், கவிமணி அம்.கௌரிதாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில், தொடக்கவுரை மற்றும் நிகழ்ச்சி தொகுப்பை கவிஞர் க.யோகாநந்தம் வழங்கவுள்ளார்.

பிரதம ஆசிரியர் உரையினை வாசல் கவிதை சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ஊடகவியலாளர் ச.திருச்செந்தூரன் ஆற்றவுள்ளதுடன், ஈழத்து கவிதை சிற்றிதழ்களின் வரிசையில் வாசல் சஞ்சிகை என்ற தலைப்பில் கவிஞர் தி.பவித்ரன் விசேட உரையாற்றவுள்ளார்.

இந்நிகழ்வில், திருகோணமலை மாவட்டத்தின் மூத்த எழுத்தாளர்களான திருமலை சுந்தா, கவிஞர் ஷெல்லிதாசன், கவிமணி அம்.கௌரிதாசன் ஆகியோர் 'கலைக்கேசரி' விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.03.2024இல் வெளியிடப்பெற்றது